Registered as a Newspaper

பக்கங்கள் – 12

விலை – ரூபா 50

# உதயன்

சுடர் : 39
கதிர் : 286

சனிக்கிழமை
07 செப்ரெம்பர் 2024

ஆவணி 22 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2055

**முச்சந்தி முரளி**



"தூண்டில் போட வந்தபடியே இருக்கினம். ஆனால் மீன்கள் சிக்குமோ எண்டது சிக்கல்தான்"

## வலைத்தளங்களில் அவதூறு செய்வோர் சி.ஐ.டி. விசாரணைகளை எதிர்கொள்வர்!

கொழும்பு, செப். 7

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் பொய்யான தகவல்களையும், தனிநபர் பரிகசிப்புகளையும் பகிர்ந்துகொள்வோர் குற்றப்புலனாய்வுத் திணைக்களத்தின் விசாரணைகளை எதிர்கொள்ளவேண்டிவரும்

11



# ரணில் இன்று யாழ். வருகை

## அனல்பறக்கும் நிலையில் இறுதிக்கட்டப் பரப்புரைகள்

**கொழும்பு, செப்ரெம்பர் 7**

**ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணத்துக்கான இறுதிக்கட்டத் தேர்தல் பரப்புரைக்காக இன்று வரவுள்ளார். இதைமுன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளன.**

11

# கொள்கை வகுப்பாளர்களாக இளையோருக்கு முன்னிலை!

### ஜனாதிபதி வேட்பாளர் சஜித் தெரிவிப்பு



கொழும்பு, செப். 7

ஐக்கிய மக்கள் சக்தியின் ஆட்சியில் இளைஞர்கள் பிரதானப் படுத்தப்படுவார்கள். நாட்டின் கொள்கை வகுப்பாளர்களாக இளைஞர்களே முன்னிலைப்படுத்தப்படுவார்கள். இது நான் இளைஞர்களுக்கு வழங்கும் வாக்குறுதி. இதைக் குறித்து வைத்துக்கொள்ளுங்கள் என்று ஜனாதிபதி வேட்பாளரும் எதிர்க்கட்சித் தலைவருமான சஜித் தெரிவித்தார்.

கொழும்பில் நேற்று நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் இளைஞர் கொள்கை பிரகடன வெளியீட்டு நிகழ்வில் கலந்து

11

## முறைப்பாடு 2,460

கொழும்பு, செப். 7

ஜனாதிபதித் தேர்தல் தொடர்பில் இதுவரை 2 ஆயிரத்து 460 முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றுள்ளதாகத் தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

அதன்படி, தேர்தல் சட்டங்களை மீறியமை தொடர்பில் தேசிய தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவநிலையத்துக்கு 930 முறைப்பாடுகளும், மாவட்ட தேர்தல் முறைப்பாட்டு முகாமைத்துவ நிலையத்துக்கு ஆயிரத்து 530 முறைப்பாடுகளும் கிடைக்கப்பெற்றுள்ளன. தேர்தல் வன்முறைகளும் பதிவாகியுள்ளன. (அ-ம)

## ரயில் விபத்தில் சிக்கி ஒருவர் படுகாயம்!

கிளிநொச்சி, செப். 7

யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த யாழ். ராணி ரயிலுடன் மோதி ஒருவர் காயமடைந்துள்ளார்.

கணேசபுரம் பகுதியில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவையைக் கடக்க முற்பட்டபோதே இந்த அசம்பா

11

## மயங்கி வீழ்ந்து முதியவர் சாவு!

சாவகச்சேரி, செப். 7

வீதியால் சென்ற முதியவர் ஒருவர் திடீரென மயங்கி வீழ்ந்து உயிரிழந்துள்ளார். இந்தச் சம்பவம் நேற்றுமுன்தினம் இரவு சாவகச்சேரி கற்குளிப் பகுதியில் இடம்பெற்றுள்ளது.

மயங்கி விழுந்த முதியவர் அயலவர்களால் மீட்கப்பட்டு மருத்துவமனைக்குக் கொண்டு செல்லப்பட்ட நிலையில், அவரைப்

11

## இந்திய மீனவர்களுக்கு ஒத்திவைத்த சிறை!

யாழ்ப்பாணம், செப். 7

பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்துக் கைதுசெய்யப்பட்ட நாகப்பட்டின மீனவர்கள் 11 பேருக்கும் ஒத்திவைத்த சிறைத்தண்டனை விதித்தும், அவர்களை விடுவித்தும் நீதிவான் உத்தரவிட்டுள்ளார்.

ஓகஸ்ட் 24ஆம் திகதி பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து கைது செய்யப்பட்ட நாகப்பட்டினம் மாவட்ட மீனவர்கள், விளக்கமறியலுக்குப் பின்னர் நேற்று வெள்ளிக்கிழமை பருத்தித்துறை நீதிமன்றில் முற்படுத்தப்

11

## 'வீரர்களின் போர்' இன்று ஆரம்பம்

விரிவு :- பக். 06

### வட்டுக்கோட்டை விபத்து

## படுகாயமடைந்த முதியவர் இறப்பு

யாழ்ப்பாணம், செப். 7

வட்டுக்கோட்டையில் நேற்றுமுன்தினம் இடம்பெற்ற விபத்தில் படுகாயமடைந்திருந்த முதியவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

அராலி மத்தி, வட்டுக்கோட்டை, கணவத்தைப் பகுதியைச் சேர்ந்த நடராசா (வயது-65) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். மேலதிக விசாரணைகளை வட்டுக்கோட்டை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (அ-ம-26-27)

### கொள்ளையிடப்பட்ட மோ.சைக்கிளில் வந்து

## சங்கிலி அறுத்தவர் வவுனியாவில் கைது!

வவுனியா, செப். 7

அநுராதபுரத்தில் மோட்டர்சைக்கிள் ஒன்றைக் கொள்ளையிட்டு, அதைப் பயன்படுத்தி 9 இடங்களில் சங்கிலிகளைக் கொள்ளையிட்ட குற்றச்சாட்டில் வவுனியாவில் வைத்து ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை வவுனியா - தோணிக்கல் பகுதியில் வீதியால் மோட்டார்சைக்கிளில் சென்ற

11

## வன்முறைக்குழுவொன்று நேற்று வட்டுக்கோட்டையில் அட்டகாசம்

### உடன் கைதுசெய்யுமாறு பொதுமக்கள் போராட்டம்

யாழ்ப்பாணம், செப். 7

வட்டுக்கோட்டை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட கணவத்தைப் பகுதியில் வன்முறைக் குழுவொன்று வீட்டுக்குள் புகுந்து அட்டகாசம் புரிந்ததில் சிறுவர்கள், பெண்கள் உள்ளிட்ட ஐவர் காயமடைந்துள்ளனர்.

இந்த வன்முறைக் குழுவை உடன் கைது செய்யவேண்டும் என்று பொதுமக்கள் நேற்றுக் கவனவீர்ப்புப் போராட்டத்திலும் ஈடுபட்டனர்.

ஆறு பேரைக் கொண்ட குழுவே வீட்டுக்குள் அத்துமீறி நுழைந்து எங்கள் மீது

11

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# நயவஞ்சகர்களுடன் இணையமாட்டேன்

## சஜித் சபதம்

கொழும்பு,செப்.7

**நாட்டை அழிக்கும் கும்பல்களுடன் எந்தவொரு சந்தர்ப்பத்திலும் இணையப்போவதில்லை என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

காலியில் நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் அவர் இதனைத் தெரிவித்தார்.

நாட்டை மீட்டெடுக்கக்கூடிய சிறந்த திட்டம் தமது கட்சியிடம் உள்ளது.

எமது வெற்றி உறுதியாகியுள்ள நிலையில் முகநூல் மற்றும் வேறு இணையத் தளங்களுக்குப் பணம் செலுத்தி பொய்ச் செய்திகள் வெளியிடப்படுகின்றன.

நாம் சில தரப்புகளுடன் இணைந்து கொள்ளப்போவதாக இந்தச் செய்திகள் குறிப்பிட்ட போதிலும் அவற்றில் எந்த உண்மையும் கிடையாது.

எதிர்வரும் 21ஆம் திகதி ஐக்கிய மக்கள் சக்தி தேர்தலில் வெற்றியீட்டியதன் பின்னர் இந்த நாட்டின் 220 இலட்சம் பொது மக்களுடன் இணைந்து கொள்ளுமே தவிர வேறு யாருடனும் இணைந்து கொள்ளாது. தோல்வி அடைந்த ஊழல் மோசடிமிக்க அரசியல்வாதிகளுடன் கூட்டணி சேரப் போவதில்லை என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# அநுர- ரணில் அரசியல் 'டீல்'

## சஜித் பகிரங்கம்

கொழும்பு,செப்.7

ஜனாதிபதி வேட்பாளர்களான ரணில் விக்கிரமசிங்க மற்றும் அநுர குமார திஸாநாயக்கவுக்கும் இடையில் ஒப்பந்தமொன்று இருப்பது அம்பலமாகியுள்ளதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திஸாநாயக்கவிற்கு அளிக்கும் வாக்கு திருடர்களின் அணியையே காப்பாற்றும். ரணில் தரப்புடன் அவர்களுக்கு ஒப்பந்தம் இருப்பது நிரூபணமாகியுள்ளது.

இந்த நாட்டில் உள்ள 10,096 பாடசாலைகளையும் நாம் ஸ்மார்ட் பாடசாலைகளாக மாற்றுவோம் என்ற பயமும் அவர்களுக்கு உள்ளது. இந்த நாட்டின் சுகாதார சேவையை கட்டியெழுப்புவோம் எனவும் அவர்கள் அஞ்சுகின்றனர். இதனால் தான் ரணில் அநுர ஒப்பந்தம் ஏற்படுத்தப்பட்டுள்ளது - என்றார். (ச)

# ஜனாதிபதி ரணிலுக்கு தோல்வி புதிதல்ல


## அநுரகுமார தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப். 7

ஜனாதிபதித் தேர்தலில் ரணில் விக்கிரமசிங்க தோல்வியடைந்ததும் அமைதியாக வீடு செல்வார். ஏனெனில் அவருக்குத் தோல்வியொன்றும் புதிதல்ல. - இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.

உதயன் பணிமனைக்கு நேற்றுமுன்தினம் வருகை தந்து ஆசிரியர் பீடத்துடன் இடம்பெற்ற நேர்காணலின்போதே அவர் மேற்கண்டவாறு கூறினார்.

'ஜனாதிபதித் தேர்தலில் தேசிய மக்கள் சக்தி வெற்றி பெறுவதை தற்போதுள்ள ஆட்சியாளர்கள் அனுமதிப்பார்களா?' என்ற கேள்விக்குப் பதிலளித்த அவர், தேர்தலின் முடிவில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைதியாக வீடு செல்வார். அவருக்குத் தோல்வி புதிதல்ல. எந்தக் குழப்பமும் இல்லாமல் தேர்தல் நடந்து முடியும்- என்றார். (ஒ.5)



# அநுரவை சஜித்தால் தோற்கடிக்க முடியாது

## ரணில் தெரிவிப்பு

கொழும்பு,செப்.7

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்கவைத் தோற்கடிக்க எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸவால் முடியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மத்துகமையில் இடம்பெற்ற பிரசாரக் கூட்டத்தில் கலந்துகொண்டு அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டுள்ளார்.

எமது நாட்டின் வரலாற்றில் எதிர்க்கட்சித் தலைவராக இருந்த எவரும் மூன்றாவதாக எந்த தலைவரையும் வளர்த்து விடமால் ஆளும் அரசாங்கத்துடன் போட்டியிட்டனர். ஆனால், சஜித் இன்று எதிர்க்கட்சித் தலைவராக என்ன செய்துள்ளார்? அவர் அநுரகுமார திஸாநாயக்க வளர்வதற்கு இடமளித்துள்ளார். சஜித் பிரேமதாஸவுக்கு வாக்களிப்பது அநுரவுக்கு ஒட்சிசன் அளிப்பதைப் போன்றதாகும். சஜித்தால் ஒருபோதும் அநுரவை தோற்கடிக்க முடியாது என்றும் குறிப்பிட்டார். (ச-இ)

# வேட்பாளர்கள் மோதும் நேரடி விவாதம் இன்று



கொழும்பு, செப். 7

ஜனாதிபதித் தேர்தலில் போட்டியிடும் ஜனாதிபதி வேட்பாளர்களின் பொதுவிவாதம் இன்று நடைபெறவுள்ளதாக சுதந்திரமான மற்றும் நியாயமான தேர்தலுக்கான மக்கள் நடவடிக்கையை மேற்கொள்ளும் பவ்ரல் அமைப்பின் நிறைவேற்றுப் பணிப்பாளர் ரோஹண ஹெட்டியாராச்சி தெரிவித்துள்ளார்.

மார்ச் 12 இயக்கம் ஏற்பாடு செய்துள்ள இந்த நிகழ்ச்சி இன்று பிற்பகல் 3 மணிமுதல் மாலை 5 மணிவரை அனைத்து பிரதான தொலைக்காட்சி அலைவரிசைகள் மூலமாக நேரலையாக ஒளிபரப்பப்படவுள்ளது. இதுவரையில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாஸ, ஶ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளர் நாமல் ராஜபக்ச, 'சர்வஜன அதிகார' ஜனாதிபதி வேட்பாளர் திலித் ஜயவீர மற்றும் தமிழ்ப் பொதுவேட்பாளர் பா. அரியநேந்திரன் ஆகியோர் விவாதத்தில் பங்கேற்பதை உறுதிப்படுத்தியுள்ளனர்.

தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்கவுக்கு அழைப்பு விடுக்கப்பட்டபோதும் அவர் வருகையை உறுதிப்படுத்தவில்லை. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பங்கேற்பது கடினம் என அவர் தரப்பினர் எழுத்து மூலம் அறிவித்துள்ளனர் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச)


# சஜித் – தமிழரசு 'டீல்' என்ன?

## கேட்கிறார் அங்கஜன்

யாழ்ப்பாணம், செப். 7

தமிழரசுக் கட்சியினரில் சிலர் சஜித் பிரேமதாஸாவுக்கு ஆதரவு என்கின்றார்கள். ஆனால், சிலர் ஆதரவு இல்லை என்கின்றனர். சஜித் பிரேமதாஸாவுக்கு ஆதரவு வழங்கும் தமிழரசுக் கட்சியினர் தமக்கும், சஜித்துக்கும் இடையிலான டீல் தொடர்பில் மக்களுக்கு வெளிப்படையாகக் கூற வேண்டுமென நாடாளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார். தமிழரசுக் கட்சியினர் சஜித் பிரேமதாஸவை ஆதரிப்பதற்குக் காரணமாக 13 பிளஸ் எனச் சொல்கிறார்கள்.

இதனை நாம் கடந்த காலங்களிலும் கேள்விப்பட்டோம். தமிழரசுக் கட்சியினர் சஜித் பிரேமதாஸவுடன் 'டீல்' பேசி அந்த 13 பிளஸ் என்பதனைப் பெறுவதாக இருந்தால் அது என்ன? என்பதனை மக்களுக்குத் தெளிவாகக் கூற வேண்டும்- என்றார். (ஒ-66)



# ரணிலின் ஆட்டம் 15 நாள்கள்தான்

கொழும்பு, செப். 7

இன்னும் 15 நாள்கள்தான் இந்த ஜனாதிபதி இருக்கப்போகின்றார். எனவே, எமது இராஜாங்க அமைச்சர்களின் பதவிகளை பறிப்பதால் எதுவும் நடக்கப்போவதில்லை. அவர்கள் விரைவில் அமைச்சர்களாக பதவியேற்பார்கள் என்று சிறிலங்கா பொதுஜன பெரமுன கட்சி தெரிவித்துள்ளது.

பொதுஜன பெரமுன கட்சியின் நான்கு இராஜாங்க அமைச்சர்களின் பதவிகள் ஜனாதிபதியால் பறிக்கப்பட்டமை தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே இவ்வாறு அந்தக் கட்சியின் செயலர் தெரிவித்தார்.

அதேவேளை, சிறிலங்கா பொதுஜன பெரமுனக் கட்சியில் இருந்து சென்ற நாடாளுமன்ற உறுப்பினர்களால் ஆரம்பிக்கப்பட்டுள்ள புதிய கூட்டணி தமது கட்சிக்கு எவ்வித சவாலாக அமையாது எனவும் அவர் கூறினார். (ஒ-44)

# கழுகுப் பார்வைக்குள் வேட்பாளர் செலவீனம்

கொழும்பு, செப்.7

ஜனாதிபதித் தேர்தல் வேட்பாளர்களின் செலவீனங்களை பற்றியும் கண்காணித்து வருவதாக ஜனநாயக மறுசீரமைப்பு மற்றும் தேர்தல் கற்கைகளுக்கான நிறுவனத்தின் நிறைவேற்றுப்பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

அச்சு, இலத்திரனியல் ஊடகங்களில் வெளியிடப்படும் விளம்பரங்களையும் தொடர்ச்சியாக கண்காணித்து வருவதாகவும் அவர் தெரிவித்துள்ளார்.

வேட்பாளர்களின் செலவீனங்களை கண்காணிப்பது இதுவே முதல் தடவை எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எரிபொருள் இல்லாமையால்

# நாகை – காங்கேசன் கப்பல்சேவை நிறுத்தம்!

பயணிகள் அசௌகரியம்

**யாழ்ப்பாணம், செப்.7**

**கப்பலில் போதியளவு எரிபொருள் இன்மை காரணமாக நாகப்பட்டினத்துக்கும் காங்கேசன்துறைக்கும் இடையிலான கப்பல் போக்குவரத்தானது திடீரென இடைநிறுத்தப்பட்டதால் பயணிகள் பெரும் அசௌகரியங்களுக்கு உள்ளாகியுள்ளனர்.**

கடந்த சிலவாரங்களுக்கு முன்னர் இந்தக் கப்பல் சேவையானது உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டது.

இந்தக் கப்பல் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை காலை நாகப்பட்டினத்தில் இருந்து புறப்பட்டு காங்கேசன்துறையை வந்தடைந்தது.

பின்னர் காங்கேசன்துறையில் இருந்து நாகப்பட்டினத்துக்கான பயணத்தை ஆரம்பிப்பதற்கு பயணிகளுடன் தயாரான நிலையில் கப்பலில் போதிய எரிபொருள் இன்மையால் அந்தப் பயணம் திடீரென இடைநிறுத்தப்பட்டதால் பயணிகள் கப்பலிலிருந்து இறக்கப்பட்டனர் . இந்தநிலையில் பயணிகள் ஏமாற்றத்துடன் திரும்ப நேரிட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது. (ச-27)



அநுரவின் பரப்புரையை

## ஐரோப்பியக் குழு கண்காணிப்பு!

யாழ்ப்பாணம், செப்.7

யாழ்ப்பாணம் வீரசிங்கம்மண்டபத்தில் இடம்பெற்ற அநுரகுமார திஸாநாயக்கவின் தேர்தல் பரப்புரை கூட்டத்துக்கு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்புக் குழுவினர் வருகை தந்து, கண்காணித்துள்ளனர். இதன்போது தேர்தல் பரப்புரைச் செயற்பாடுகள் மற்றும் கலந்துகொண்ட மக்களுடைய செயற்பாடுகள் தொடர்பிலும் அவதானம் செலுத்தியிருந்தார்கள். (ச-20)

## சிற்றூழியர் உயிர்மாய்ப்பு

வவுனியா,செப்.7

வவுனியா பொதுமருத்துவமனையில் பணிபுரியும் சிற்றூழியர் ஒருவர் அவரது வீட்டில் தவறான முடிவெடுத்து உயிரிழந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். லோயினி (வயது -39) என்ற இரண்டு பிள்ளைகளின் தாயாரே உயிரிழந்துள்ளார். (ச-110)

## ஊடகவியலாளர்களுக்கான மனித உரிமைசார் அமர்வு!

யாழ்ப்பாணம், செப்.7

இலங்கை மனிதஉரிமைகள் ஆணைக்குழுவின் ஏற்பாட்டில் ஊடகவியலாளர்களுக்கான மனித உரிமைசார் செயலமர்வு ஒக்ரோபர் மாதத்தில் நடத்தப்படவுள்ளது. குறித்த செயலமர்வானது கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு ஒன்றாகவும், மன்னர் மற்றும் வவுனியா ஒன்றாகவும் இணைந்து நடத்தப்படவுள்ளது. ஒவ்வொரு மாவட்டத்தையும் பிரதிநிதித் துவப்படுத்தி ஒரு ஊடகவியலாளரது விவரங்களை 077 794 7495 என்ற வட்ஸ் ஆப் இலக்கத்தினூடாகத் தெரியப்படுத்துமாறு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் த. கனகராஜ் தெரிவித்துள்ளார். (ச-100)

## சிறுவர் துஷ்பிரயோகங்கள்; தடுக்க ஆஸி. உதவும்

சிட்னி , செப் . 7

இணையவழி சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு இலங்கை பொலிஸாருக்கு பூரண ஒத்துழைப்பு வழங்கத் தயாராக இருப்பதாக அவுஸ்திரேலிய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

கடந்த மாதம் 18-29 காலப்பகுதியில் சிறுவர், பெண்கள்பிரிவு பிரதிப் பொலிஸ்மா அதிபர் ரேணுகா ஜயசுந்தர, பொறுப்பதிகாரி சிவராஜா காண்டீபன் ஆகியோர் அவுஸ்திரேலியாவுக்கு பயணம் மேற்கொண்டனர். அவுஸ்திரேலிய பொலிஸாருடன் கலந்துரையாடும் போது இணைய வழி சிறுவர் துஷ்பிரயோகங்களைத் தடுப்பதற்கு தொழில்நுட்ப உதவிகளை வழங்குமாறு கோரிக்கை முன்வைத்தனர். இந்தக் கோரிக்கைக்குப் பதிலளித்த அவுஸ்திரேலிய பொலிஸார் இணையவழி சிறுவர் துஷ்பிரயோகம், எல்லை கடந்த குற்றம், இணையவழி சிறுவர் துஷ்பிரயோகத்தில் ஈடுபடும் குற்றவாளிகளை அடையாளம் காண்பதற்குரிய சகல தொழில்நுட்ப உதவிகளையும் இலங்கைப் பொலிஸாருடன் பகிர்ந்துகொள்ளத் தயாராக இருப்பதாகத் தெரிவித்தனர். (ச-22-6)



## மணலை மீட்ட பொலிஸார்

கிளிநொச்சி, செப். 7

தருமபுரம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புளியம் பொக்கணை -வண்ணாத்தி ஆறு காட்டுப் பகுதியில் சட்டவிரோதமாக அகழப்பட்டு, சேகரிக்கப்பட்டு வைக்கப்பட்டிருந்த 15 கியூப் மணலை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர். (ஒ-113)

## எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தல் மொட்டுக் கட்சி கட்டுப்பணம்

கொழும்பு, செப்.7

எல்பிட்டிய பிரதேசசபைத் தேர்தலுக்கான கட்டுப்பணத்தை ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி நேற்றுச் செலுத்தியது.

கட்சியின் பொதுச் செயலாளர் சாகர காரியவசம் தலைமையிலான குழுவினர் தேர்தல் ஆணைக்குழுவுக்கு வருகை தந்து கட்டுப்பணம் செலுத்தியிருந்தனர்.

குறித்த பிரதேசசபைத் தேர்தலுக்கான வேட்புமனுக்கள் எதிர்வரும் 9 ஆம் திகதி முதல் 12 ஆம் திகதிவரை ஏற்றுக்கொள்ளப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ச-44)

## தினம் தெரியுமோ?

**எலக்சன் காலத்தில தான் அரசியல்வாதியள் எல்லாரும் பாரி வள்ளல் மாதிரி கேட்டதெல்லாம் தருவினம். அதை இடையில புறோக்கர் வேலை பாக்கிற எங்கட ஆக்களும் சிக்கெனப் பிடித்து பொக்கெற்றுகளை நிரப்பிப்போடுவினம். அதால அரசியல்வாதியள் குடுக்கிற கொடை முழுசா உரியவைக்கு போய்ச் சேருறேலை. இது அந்தக் கொடையை வாங்கிறவைக்கும் நல்லாத் தெரியும். ஆனாலும் சும்மா வாற உதவியில அவையள் அடிக்கிறதை அடிச்சிட்டு மிச்சத்தை தரட்டும் எண்ட மனநிலையிலதான் அந்த உதவியளை வாங்கிற ஆக்கள் இருப்பினம்.**

**இந்தமுறையும் இஞ்சையிருக்கிற கழகங்களுக்கு வேட்பாளர்மார் காசைக் கொட்டத் தொடங்கிட்டினம். அவைக்காக இஞ்ச புறோக்கர் வேலை பாக்கிறவை மூலமா எந்தெந்தக் கழகங்களுக்கு எவ்வளவு குடுக்கோனும் எண்டு லிஸ்ட் எல்லாம் போட்டு அலுவல் 'காஸ் சிலிண்டர்' வேகத்தில நடக்குது. அப்பிடி ஒரு வேட்பாளர் தனக்கு சப்போர்ட்டைக் கூட்டுறதுக்காக யாழ்ப்பாணத்தில உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு கிட்டத்தட்ட 5 லட்சம் ரூபா பெறுமதியான விளையாட்டுச் சாமான்கள் தாறதா லிஸ்ட் எடுத்தவர். யாழ்ப்பாணத்துக்கு பொறுப்பா உள்ளவை தான் எந்தெந்தக் கழகத்துக்கு எவ்வளவு குடுக்கோனும் எண்டு சிபார்சு பண்ணினவை. அந்த வேட்பாளின்ர கூட்டம் நடக்கேக்க, லிஸ்டில உள்ள விளையாட்டுக்கழகங்களுக்கு விளையாட்டுச் சாமான் குடுக்குறதெண்டதுதான் டீல். இப்பிடி லிஸ்டில தங்கட கழகத்தின்ர பேர் போடுறதுக்காக முதலில ஓடுப்பட்டு, வேட்பாளருக்காக இஞ்ச வேலை செய்யிறவரிட்ட அடிக்கொருதரம் விளையாட்டுக்கழகக்காரர் வந்து போனவை. ஆனால் அந்த லிஸ்ட், பைனல் பண்ணி உரிய இடத்துக்கு அனுப்பினதும் ஒரு ஈ, இலையானைக்கூட காணேலையாம். நோட்டீஸ் ஒட்டக்கூட ஆக்களைப் பிடிக்க ஏலாமல் கிடக்காம். போன் எடுத்தாலும் ஆன்ஸர் பண்றேலையாம். இந்த லட்சணத்தில வேட்பாளரைக் கூட்டியந்திட்டு, வெறும் கதிரையளுக்குத்தான் கூட்டம் வைக்கவேண்டி வந்திடுமோ எண்டு இஞ்ச பொறுப்பா இருக்கிற வைக்கு பயம் வந்திட்டுது போல.**

**அதால இப்ப அவசரமா எல்லாக் கழகங்களுக்கும் வட்ஸப்பில ஒரு கடிதம் அனுப்பி இருக்கினம். 'வேட்பாளர் வாற கூட்டத்துக்கு எல்லா விளையாட்டுக்கழகக் காரரும் 10 பேருக்கும் மேல கூட்டிக் கொண்டு வரவேணும். அப்பிடி வராட்டி அவைக்கு குடுக்க இருந்த பொருளையெல்லாம் வேற கழகத்துக்கு குடுத்திடுவம்' எண்டதுதான் வட்ஸப்பில அனுப்பின கடிதத்தின்ர சாராம்சமாம். இப்ப எல்லா விளையாட்டுக்கழகங்களும் கூட்டத்துக்கு கொண்டு போக ஆக்களைத் தேடிக்கொண்டு இருக்கினமாம். கூட்டமெல்லாம் வாக்கா மாறாது கண்டியளோ.**

-பட்சி

padsi@uthayan.com

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கும்பாபிஷேகம்

யாழ்ப்பாணம், செப்.7
வட்டுக்கோட்டை, சங்கரத்தை பிட்டியம்பதி அருள்மிகு வீர பத்திர சுவாமி சமேத பத்திரகாளி அம்பாள் ஆலய கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 5.30மணிக்கு இடம்பெறவுள்ளது. கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 7மணி தொடக்கம் மாலை 5மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்தனர். (ரி)

## இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** விநாயகரை வணங்கி முன்னேற்றம் காணும் நாள். உங்கள் விருப்பம் நிறைவேறும். உடல்நிலையில் கவனம் செலுத்த வேண்டிய நாள். உங்கள் வேலைகள் இழுபறியாகும். சாதகமான நாள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் விலகும்.

**இடபம்:** விருப்பம் நிறைவேறும் நாள். உறவினர்களால் நன்மை உண்டாகும். பணவரவு திருப்தி தரும். குடும்ப நலனில் அக்கறை கொள்வீர். வியாபாரத்தில் இருந்த பாதிப்பு விலகும். கோயில் வழிபாட்டால் நன்மை காணும் நாள்.

**மிதுனம்:** கவனமாக செயற்பட வேண்டிய நாள். அலைச்சல் அதிகரிக்கும். எதிர்பார்ப்பு இழுபறியாகும். ஆதாயமான நாள். முயற்சியின் வழியே பலன் அடைவீர். குடும்பத்தினர் விருப்பத்தை நிறைவேற்றுவீர். முயற்சி வெற்றியாகும் நாள்.

**கடகம்:** நன்மையான நாள். உறவினர் உதவியால் உங்கள் விருப்பம் நிறைவேறும். நினைப்பது நிறைவேறும் நாள். மக்கள் சேவையில் ஈடுபடுவீர். மற்றவர் பாராட்டுக்கு ஆளாவீர். எதிர்ப்பை சந்திக்கும் நாள். தடையும் தாமதமும் ஏற்படும்.

**சிம்மம்:** முன்னேற்றமான நாள். எதிர்பார்த்த பணம் வரும். கொடுத்த வாக்கின்படி செயற்படுவீர். சங்கடத்துக்கு ஆளாகும் நாள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகளை சரிசெய்வீர்கள். வரவு அதிகரிக்கும் நாள். முயற்சி நிறைவேறும்.

**கன்னி:** யோகமான நாள். வியாபாரத்தில் திட்டமிட்டு செயற்பட்டு இலாபம் காண்பீர். இழுபறியாக இருந்த வேலை பூர்த்தியாகும். நினைத்தவற்றை அடைவீர். மனதில் இருந்த குழப்பம் விலகும்.

**துலாம்:** எச்சரிக்கையுடன் செயற்பட வேண்டிய நாள். வெளியூர்ப் பயணத்தால் சோர்வு ஏற்படும். மகிழ்ச்சியான நாள். உங்கள் செயல்கள் நீங்கள் நினைத்தபடியே நடந்தேறும். எதிர்பார்த்த பணம் வரும். உழைப்பு அதிகரிக்கும் நாள்.

**விருச்சிகம்:** நிதானமாக செயற்பட வேண்டிய நாள். நீங்கள் எதிர்பார்த்த தகவலை உறவினர்கள் கொண்டு வருவர். அதிர்ஷ்டமான நாள். உங்கள் செயலில் ஆதாயம் ஏற்படும். முயற்சி நிறைவேறும்.

**தனுசு:** வியாபாரத்தில் நீங்கள் எதிர்பார்த்த வருமானம் உண்டாகும். உங்கள் முயற்சி பலிதமாகும். எச்சரிக்கையுடன் செயற்படவும். உங்கள் தனிப்பட்ட தகவல்களை இன்று யாருக்கும் வழங்க வேண்டாம். இலாபம் காணும் நாள்.

**மகரம்:** நினைப்பதை சாதிக்கும் நாள். தெய்வ அருள் உண்டாகும். இழுபறியாக இருந்த முயற்சி நிறைவேறும். நன்மையான நாள். உங்கள் விருப்பங்கள் நிறைவேறும். செயற்பட வேண்டிய நாள்.

**கும்பம்:** விழிப்புடன் செயற்பட வேண்டிய நாள். மனதில் குழப்பம் அதிகரிக்கும். வரவில் தடையுண்டாகும். முயற்சியால் முன்னேற்றம் காணும் நாள். வெளியூர் பயணத்தால் உங்கள் எதிர்பார்ப்பு நிறைவேறும்.

**மீனம்:** சிந்தித்து செயற்பட வேண்டிய நாள். நீங்கள் நினைத்ததற்கு மாறான நிகழ்வுகள் இன்று நடைபெறும். யோகமான நாள். குடும்பத்தில் ஏற்பட்ட பிரச்சினைகள் முடிவிற்கு வரும்.

# தமிழர் திரட்சியை காண்பிப்போம்!

### ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப்.7
இந்த மண்ணின் எம் சந்ததியின் இருப்பைச் சிந்திக்கத்தக்க மனிதராகநாம் உணரத்தவறின் அனைத்தும் பூச்சியம் ஆன பின் வருந்திப் பயனில்லை. காலத்தின் தேவையாக உணரப்பட்டிருக்கின்ற தமிழ்த்தேசியத்திரட்சியைக் காண்பிப்போம். - இவ்வாறு ஒருங்கிணைந்த தமிழர் கட்டமைப்பு தெரிவித்துள்ளது. அரசியல் என்பது எமது வாழ்வின் சகல தளங்களிலும் செல்வாக்கு என்பதை நாம் அனைவரும் உணரவேண்டும். எம் இனப் பரம்பல் பல மாவட்டங்களில் தொடர்ச்சியாக மாற்றியமைக்கப்பட்டுக் கொண்டு வருகின்றது.
எமது சனத்தொகை வீழ்ச்சி அடைந்து கொண்டு வருகின்றது. முழுந்தவரை ஏதோ ஒரு வழியில் எம் இருப்பை எம் தாய் மண்ணில் எதிர்காலக் குழந்தைகளின் தலைநிமிர்ந்த வளமான வாழ்வுக்குப் பங்களிப்போம் என்றும் குறிப்பிடப்பட்டுள்ளது. (ச-66)

## குடமுழுக்கு

யாழ்ப்பாணம், செப்.7
கைதடி மத்தி அத்திபுலம் மூர்த்தியாவத்தை அருள்மிகு கந்தசுவாமி கோவில் புனராவர்த்தன அஷ்டபந்தன பஞ்ச குண்ட பக்ஷ பிரதிஷ்டா மஹா கும்பாபிஷேகப் பெருவிழா நாளை ஞாயிற்றுக்கிழமை அதிகாலை 6.50மணிக்கு இடம்பெறவுள்ளது.
கும்பாபிஷேகத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை காலை 7மணி தொடக்கம் மாலை 4மணி வரை எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு நடைபெறவுள்ளது என ஆலய பரிபாலனசபையினர் தெரிவித்தனர். (ச-45)

## அலங்கார உற்சவம்


யாழ்ப்பாணம், செப்.7
நாகர்கோவில் பூர்வீக நாகதம்பிரான் ஆலய வருடாந்த அலங்கார உற்சவம் எதிர்வரும் 12ஆம் திகதி வியாழக்கிழமை ஆரம்பமாகவுள்ளது.
தொடர்ந்து 11 தினங்கள் இடம்பெறும் உற்சவங்களில் 17ஆம் திகதி செவ்வாய்க்கிழமை பாம்புத் திருவிழாவும், 18 ஆம் திகதி புதன்கிழமை கப்பல் திருவிழாவும், 19ஆம் திகதி வியாழக்கிழமை வேட்டைத் திருவிழாவும், 20ஆம் திகதி வெள்ளிக்கிழமை சப்பரத் திருவிழாவும், 21ஆம் திகதி சனிக்கிழமை தீர்த்தத் திருவிழாவும், 22ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பட்டுத் தீர்த்தமும் இடம்பெறும் என ஆலய பரிபாலன சபையினர் அறிவித்தனர். (ச-45-100)



நீர்வேலி தெற்கு முருகையா கோயிலின் மஹா கும்பாபிஷேகம் நேற்று வெள்ளிக்கிழமை பக்திபூர்வமாக இடம்பெற்றது. பூரண கும்பம் எடுத்துவரப்பட்டு தூபி அபிஷேகம் மற்றும் விக்கிரகங்களுக்கான அபிஷேகம் என்பன நடைபெற்றன. (ச-17)

## கருத்தமர்வு

சாவகச்சேரி, செப்.7
தென்மராட்சிப் பிரதேச சிறுதொழில் முயற்சியாளர்களுக்கான வியாபாரத் திட்டமிடல் தொடர்பான கருத்தமர்வு பிரதேச செயலக மண்டபத்தில் அண்மையில் நடைபெற்றது.
பிரதேச சிறுதொழில் முயற்சி அபிவிருத்தி உத்தியோகத்தர்களால் நடத்தப்பட்ட நிகழ்வில் 15 முயற்சியாளர்கள் பங்குபற்றினர். (45-9)



## குருதிக் கொடை

யாழ்ப்பாணம், செப்.7
நல்லூர்க் கந்தசுவாமி ஆலய மஹோற்சவப் பெருந் திருவிழாவை முன்னிட்டு யாழ். போதனா மருத்துவமனை இரத்தவங்கிப் பிரிவு, யாழ். மாநகரசபை, யாழ்.சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனை, சர்வதேச மருத்துவ சுகாதார ஸ்தாபனம் மற்றும் வாழ்க்கைப் பாதுகாப்பு போன்றவை இணைந்து நடத்திய மாபெரும் குருதிக்கொடை முகாம் நிகழ்வு கடந்த சனிக்கிழமை முதல் கடந்த செவ்வாய்க்கிழமை வரை யாழ். மாநகரசபை சுகாதார மருத்துவ அதிகாரி பணிமனையில் நடைபெற்றது. (ரி-66)



வட்டுக்கோட்டை வடக்கு கற்பகப் பிள்ளையார் ஆலய பெருந்திருவிழா அண்மையில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகியது. (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

# கொள்கைகள் பலவிதம் ஒவ்வொன்றும் ஒருவிதம்


**போ**ர்க்குற்றவாளிகளைத் தண்டிக்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கு உரியது. ஆதலால், போர்க்குற்றவாளிகளுக்கான தண்டனை என்பதில் நான் தலையிடப்போவதில்லை. மாறாக அவர்களின் குற்றங்களை வெளிப்படுத்துவதே எனது வேலை என்று அழுத்தம் திருத்தமாகத் தனது நிலைப்பாட்டை முன்வைத்திருக்கின்றார் அநுரகுமார திஸாநாயக்க. சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில் "போர்க்குற்றவாளிகள் தண்டிக்கப்படமாட்டார்கள். அதைத் தமிழர்கள் எதிர்பாக்கவும் இல்லை. என்ன நடந்தது என்பதை அறியவே தமிழர்கள் ஆர்வம் கொண்டிருக்கின்றனர்" என்று அநுரகுமார தெரிவித்திருந்தார். அந்தச் சர்வதேச ஊடகத்திடம் தெரிவித்த இந்தக் கருத்துக்கான விளக்கத்தையே யாழ்ப்பாணத்தில் வைத்துத் தெரிவித்திருக்கின்றார் அநுரகுமார திஸாநாயக்க.

தெற்கின் ஜனாதிபதி வேட்பாளர்கள், தமிழர்கள் நலனிலும் - தமிழர் விடயங்களிலும் பாரபட்சம் உடையவர்கள். 'கழுவுற மீனில் நழுவுற மீனானது' அவர்களின் அரசியல். அநுரகுமார ஒன்றும் ஆபத்பாந்தவர் இல்லை. அவரும் மிகச் சாதாரணமானவர் - ஒரு சராசரி சிங்கள வேட்பாளர்-சந்தர்ப்பவாத ஆட்சியாளர் என்பதைத்தான் அநுரவின் யாழ்ப்பாண உரைகள் கனதியாகக் கட்டியம் செய்கின்றன.

போர்க் குற்றவாளிகளுக்குத் தண்டனை வழங்கும் அதிகாரம் நீதிமன்றங்களுக்கே உண்டு. குற்றவாளிகளை வெளிப்படுத்துவதே தனது வேலை என்று தெரிவிக்கும் இதே அநுரதான், போதைப்பொருள் கடத்தல்காரர்கள் 'சிறையிலிடப்படுவார்கள்', ஊழல் பேர்வழிகள் 'தண்டிக்கப்படுவார்கள்' என்றெல்லாம் நீட்டி முழக்கியிருக்கின்றார். ஆக, போதைப்பொருள் கடத்தல்காரர்களையும், ஊழல் பேர்வழிகளையும் சிறையிலிடுவதற்கும், தண்டிப்பதற்கும் மட்டும் அவருக்கு அதிகாரங்கள் எங்கிருந்து வந்தன? என்ற கேள்வி எழுகின்றதல்லவா? அநுர தமிழர்களுடன்-தமிழர் விவகாரங்களில் பேசிக்கொள்ளும் பாஷையில் சொல்வதானால், 'போதைப்பொருள் கடத்தல்காரர்கள் நீதிமன்றத்தில் நிறுத்தப்படுவார்கள்', 'ஊழல் பேர்வழிகள் வெளிப்படுத்தப்படுவார்கள்' என்றல்லவா அவர் சொல்லியிருக்க வேண்டும்.

தன்னைக் 'கொள்கைப் பற்றாளர்' என்று கூறிக்கொள்ளும் அநுர குற்றவாளிகள் விடயத்தில் மட்டும் [illegible] விட்டுக் கொடுப்புகளையும், இருவேறு நிலைப்பாடுகளையும் வரிந்துகொள்வது ஏன்? இந்தச் சமரச அரசியல் எதற்காக? யாரைத் திருப்திப்படுத்துவதற்காக? எல்லாவற்றுக்கும் மேல், ஊழல் பேர்வழிகளையும், மோசடியாளர்களையும், போதைக் கும்பல்களையும் நீதிமன்றங்கள் தண்டித்தே தீரும் என்பதில் ஆழமான நம்பிக்கையுடைய அநுர, இலங்கையின் நீதித்துறையால் போர்க்குற்றவாளிகளுக்குத் தண்டனை கிடைக்கும் என்பதில் நம்பிக்கை கொள்ளவில்லையா? இந்தக் கேள்விகளுக்கான பதில்களை அநுர எவ்வளவுக்கெவ்வளவு 'அரசியல் சதிராட்டங்களுக்கு' அப்பாற்பட்டு முன்வைக்கின்றாரோ, அவ்வளவுக்கவ்வளவு தமிழர்கள் அநுரவை நெருங்கவே செய்வார்கள். மற்றும்படி அநுர தற்போது வெளிப்படுத்தியிருக்கும் இராஜதந்திர சொல்லாடல்கள் தமிழர்களுக்குப் புதிதல்ல. அத்தகைய சொல்லாடல்களில், 'பழம் தின்று விதைபோட்டவர்கள்' தமிழர்கள். ஐந்தா அல்லது பத்தா, எழுபது ஆண்டுகால அரசியல் அல்லவா இது...?

இறுதியாக:
போர்க்குற்றங்கள் சுமத்தப்பட்டவர்களுக்கு ஸ்ரீலங்காவில் சலுகைகள் வழங்கப்படுகின்றன. பதவி உயர்வுகள் வழங்கப்படுகின்றன. போர்க்குற்றவாளிகள் இன்றும் உயர் பதவிகளில் இருக்கின்றனர். உயர் பதவிகளுக்காகப் பரிசீலிக்கப்படுகின்றனர் என்பதும்தான் கொழும்பின் மீது சர்வதேசம் கடந்த ஒன்றரைத் தசாப்தமாக முன்வைத்துக் கொண்டிருக்கும் பிரதான குற்றச்சாட்டாகக் காணப்படுகின்றது. இதுவொன்றும் நீதிமன்றங்களால் வழங்கப்படும் வரப்பிரசாதங்கள் அல்ல. நீதிமன்றங்களைச் சார்ந்திருக்கும் விடயங்களும் அல்ல. எனவே, அத்தகைய குற்றவாளிகளுக்கு, தனது நிறைவேற்று அதிகாரங்களைப் பயன்படுத்தி, 'திணைக்கள ரீதியாக அநுர வழங்கப்போகும் தற்துணிவான தண்டனை என்ன?'




# தமிழரின் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு அவசியம்

வேட்பாளர் நுவான் போபகே தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், செப்.7**

**இலங்கையில் வாழும் தமிழ் மக்களுக்கு இனப்பிரச்சினை இருக்கின்றது. அதற்கு நிச்சயம் ஏற்றுக்கொள்ளக்கூடிய அரசியல் தீர்வு காணப்படவேண்டும் என்று மக்கள் போராட்ட முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சட்டத்தரணி நுவான் போபகே தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்;
தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகத் தமிழர்கள் மீது இந்நாட்டில் தேசிய அழுத்தமொன்று உள்ளது. பெரும்பான்மையினரால் தாம் ஆளப்படுகின்றோம் என்ற உணர்வுள்ளது. இதற்கு உரமூட்டக்கூடிய பல சம்பவங்களும் எமது நாட்டில் இடம்பெற்றுள்ளன. இனப்பிரச்சினைக்கு நிலையானதொரு தீர்வு காணப்படவேண்டும். அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்துக்கு அப்பால் சென்று தீர்வுகாணப்படவேண்டும். அவர்கள் வாழும் பகுதியை எல்லை நிர்ணயம் செய்து, அவர்களுக்கு ஆள்வதற்குரிய அதிகாரம் வழங்கப்பட வேண்டும் - என்றார். (ச-44)

# மதிப்பீட்டாளருக்கு விண்ணப்பங்கள்

கொழும்பு,செப்.7
க.பொ.த. உயர் தரப்பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டாளர்களிடமிருந்து விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. இதற்கான விண்ணப்பங்கள் எதிர்வரும் 23 ஆம் திகதிக்குள் அனுப்பிவைக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளது. மேலும், மதிப்பீட்டாளர்கள் https://onlineexams.gov.lk/eic என்ற இணையத்தளத்தினூடாக விண்ணப்பிக்க முடியுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச)



# மாணவர்களுக்கு வட்டியில்லாக் கடன்

கொழும்பு,செப்.7
வட்டியில்லாக் கல்விக்கடன் திட்டத்தின்கீழ் 7ஆயிரம் மாணவர்களுக்கு கடன் வழங்க அமைச்சரவை அங்கீகாரம் வழங்கியுள்ளது. இதற்கான விண்ணப்பங்களை எதிர்வரும் 9ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் கோருவதற்கு கல்வி அமைச்சு தீர்மானித்துள்ளது. (ச)

# அநுர ஆட்சியில் பிரதமர் ஹரிணி

ஜனாதிபதித் தேர்தலில் அநுரகுமார திஸாநாயக்க வெற்றிபெற்ற பிறகு அமையவுள்ள அரசாங்கத்தில் பிரதமர் பதவி நாடாளுமன்ற உறுப்பினர் ஹரிணி அமரசூரியவுக்கு வழங்கப்படவுள்ளது எனத் தெரியவருகின்றது. பெண்களுக்கான சமஉரிமை உள்ளிட்ட விடயங்களைக் கருத்திற்கொண்டே பெண் பிரதமர் ஒருவரை நியமிப்பதற்குத் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்கு தேசிய மக்கள் சக்தியில் உள்ள அனைத்துத் தரப்பினரும் இணக்கம் தெரிவித்துள்ளனர் என அறியமுடிகின்றது.(ச-44)

# கைதிகளுக்கு வாக்குரிமை?

கொழும்பு,செப்.7
எதிர்வரும் 21 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் சிறைக்கைதிகளின் வாக்களிக்கும் உரிமை தொடர்பில் கலந்துரையாடப்பட்டுள்ளது. இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு, தேர்தல்கள் ஆணைக்குழு, சிறைச்சாலைகள் திணைக்களம் மற்றும் தேர்தல் கண்காணிப்பு அமைப்புகளின் அதிகாரிகள் ஒன்றிணைந்து, இந்த விடயத்தில் எதிர்கொள்ளப்படும் சவால்கள் குறித்து ஆராய்ந்தனர். பாதுகாப்பு விடயங்கள் மற்றும் சிறை வசதிகளுக்குள் வாக்களிக்கும் செயல்முறையின் வெளிப்படைத்தன்மையை உறுதி செய்தல் ஆகியவை ஆராயப்பட்டன. அடையாளம் காணப்பட்ட நடைமுறை சிக்கல்களுக்கு சாத்தியமான தீர்வுகளை தேடுவதற்கு ஏகமனதாக ஒப்புக்கொண்டதாக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. (ச-இ)

**நாளை**

08.09.2024
ஞாயிற்றுக்கிழமை - ஆவணி - 23
சுபநேரம் : 09.04 - 10.34
இராகுகாலம் : 04.34 - 06.04
4 ஆம் ஆவணி ஞாயிறு

**நாளொரு நல்வார்த்தை**

நல்ல முடிவுகள் அனுபவத்திலிருந்து பிறக்கின்றன. ஆனால், அனுபவமோ தவறான முடிவுகளிலிருந்து கிடைக்கிறது.
-பில் கேட்ஸ்-

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






# ‘வீரர்களின் போர்’ இன்று ஆரம்பம்

யாழ்ப்பாணம், செப். 7

**யாழ்.வலிகாமம் மண்ணின் பெரும் துடுப்பாட்டப் போட்டியாக வர்ணிக்கப்படும் யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரிக்கும், யாழ்.சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரிக்கும் இடையிலான 22 ஆவது ‘வீரர்களின் போர்’ இன்று சனிக்கிழமை, நாளை ஞாயிற்றுக்கிழமை ஆகிய தினங்களில் யாழ்.தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் இடம்பெறவுள்ளது.**

போட்டியின் ஆரம்பநாள் நிகழ்வு தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரியின் அதிபர் இ.புஸ்பரட்ணம் மற்றும் சுன்னாகம் ஸ்கந்தவரோதயக் கல்லூரியின் அதிபர் மு.செல்வஸ்தான் ஆகியோரின் இணைத் தலைமையில் நடைபெறவுள்ளது. மன்னார் ஓய்வுநிலை மாவட்ட விளையாட்டு அதிகாரி பா.கிருபாகரன் பிரதம விருந்தினராகக் கலந்துகொள்ளவுள்ளார். போட்டியின் இரண்டாம் நாள் நிகழ்வு நாளை ஞாயிற்றுக் கிழமை பிற்பகல் 1.30 மணியளவில் தெல்லிப்பழை மகாஜனக் கல்லூரி மைதானத்தில் ஆரம்பமாகி இடம்பெறவுள்ளது. (ச-66)

## பஸ் சேவை நடத்துங்கள்!

கிளிநொச்சி, செப்.7

கண்டாவளை - ஊரியான் கிராமத்துக்கு பேருந்துச் சேவை வேண்டும் என இந்தக் கிராம மக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர். ஊரியான் கிராமத்தில் இருந்து பரந்தன், கிளிநொச்சி, தருமபுரம் போன்ற பகுதிகளுக்கு மக்கள் செல்வதில் போக்குவரத்து நெருக்கடி காணப்படுகின்றது. ஊரியான் கிராமத்துக்கு கிளிநொச்சி இலங்கை போக்குவரத்துச் சபையினர் பேருந்து சேவைகளை நடத்தவேண்டும் என வும், பரந்தனில் தரித்து நிற்கும் பஸ்கள் ஊரியான் கிராமத்துக்கான போக்குவரத்துப் பணியில் ஈடுபட வேண்டும் என்றும் ஊரியான் மக்கள் வேண்டுகோள் விடுத்தனர். (ச-45-13)



## ஆன்மீக உரை

யாழ்ப்பாணம், செப்.7

சந்நிதியான் ஆச்சிரம சைவ கலைப் பண்பாட்டுப் பேரவையின் ஏற்பாட்டில் வாராந்த நிகழ்வு ஆச்சிரம முதல்வர் செ.மோகனதாஸ்சுவாமிகள் தலைமையில் சந்நிதியான் ஆச்சிரமமண்டபத்தில் நேற்று வெள்ளிக்கிழமை மு.ப. 10.45 மணிக்கு நடைபெற்றது. இந்து தர்மாசிரியர் இ.கிருஷ்ணராஜ் ‘அடியார்க்கு எளியவன் முருகன்’ எனும் தலைப்பில் ஆன்மீக உரை ஆற்றினார். (ச-45-66)

## விநாயகர் சதுர்த்தி உற்சவம்

யாழ்ப்பாணம், செப். 7

வரலாற்றுப் பிரசித்திபெற்ற இணுவில் ஸ்ரீ பரராஜசேகரப் பிள்ளையார் ஆலய விநாயகர் சதுர்த்தி உற்சவம் இன்று சனிக்கிழமை சிறப்பாக இடம்பெறவுள்ளது. வசந்தமண்டபப் பூசையைத் தொடர்ந்து இரவு7 மணியளவில் விநாயகப் பெருமான் சித்திரத் தேரில் பவனி வருவார். தொடர்ந்து நல்லூர் பிரசன்னாக் குருக்க ளின் இன்னிசைக் கச்சேரி நிகழ்வு நடைபெறும். (ச-66)

## விழிப்புணர்வுக் கருத்தரங்கு





யாழ்ப்பாணம், செப். 7

‘சிறுவர் ஆரோக்கியத்தை விழுங்கும் ஸ்மார்ட் போன் பாவனை மற்றும் மாணவர்களின் உடல் உள ஆரோக்கியங்களை பாதுகாத்தல்’ எனும் தொனிப்பொருளில் மல்லாவியில் கருத்தரங்கு ஒன்று முன்னெடுக்கப்பட்டது. மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரிகள் பணிமனையினரால் இந்தக் கருத்தரங்கு முன்னெடுக்கப்பட்டுள்ளது. இதில் வளவாளராக மல்லாவி சுகாதார மருத்துவ அதிகாரி மகாலிங்கம் சாந்த மேனன் கலந்துகொண்டு கருத்துரைகளை வழங்கியிருந்தார். (ச-27)



## நல்லிணக்கத்துக்காக பொலிஸாரால் வழிபாடு

யாழ்ப்பாணம், செப்.7

நாட்டில் இன, மத நல்லிணக்கத்தை வலியுறுத்தி யாழ். சுழிபுரம் பறாளாய் முருகன் ஆலயம் மற்றும் பறாளாய் பிள்ளையார் ஆலயங்களில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கொஸ்தா ஏற்பாட்டில் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை விசேட பூசை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டன. பூசைவழிபாட்டில் வட்டுக்கோட்டை பொலிஸ் நிலைய பொலிஸ் உத்தியோகத்தர்கள் கலந்துகொண்டனர். (ரி-27)

## கௌரவிப்பு நிகழ்வு

முல்லைத்தீவு, செப்.7

முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகளைக் கௌரவிக்கும் நிகழ்வு மேலதிக மாவட்டச் செயலர் சி.குணபாலன் தலைமையில் மாவட்டச் செயலகத்தில் கடந்த திங்கட்கிழமை நடைபெற்றது.

விளையாட்டு அமைச்சால் நடத்தப்படும் தேசிய குத்துச்சண்டை போட்டியில் வடமாகாண ரீதியில் பங்குபற்றிய முல்லைத்தீவு மாவட்ட வீராங்கனைகள் மு. இந்துகாதேவி, எஸ். யஷ்மிதா ஆகியோர் வெள்ளிப் பதக்கங்களையும், என்.ராதிகா தேசியப் போட்டியில் 4ஆம் இடத்தைப் பெற்று வடமாகாணத்தில் முதலிடத்தைப் பெற்றார். நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டச் செயலர் அ.உமாமகேஸ்வரன் வீராங்கனைகளைக் கௌரவித்தார். (ச-45-13)

## குழு விளையாட்டில் யாழ்.இந்து முதலிடம்

யாழ்ப்பாணம், செப்.7

2024 ஆம்ஆண்டு மாகாண மட்டத்தில் இடம்பெற்ற குழு விளையாட்டில் இரண்டாவது தடவையாக யாழ்ப்பாணம் இந்துக் கல்லூரி முதலிடத்தைப் பெற்று சாதனை படைத்துள்ளது. (ரி-66)

## வளங்களைப் பாதுகாப்பதற்கு மன்னாரில் அமைதிவழிப் பேரணி

### வடக்கு கடற்றொழிலாளர் இணைய பேச்சாளர் அன்னராசா அழைப்பு

மன்னார், செப்.7

மன்னார் மாவட்டத்தின் ‘வளத்தைப் பாதுகாப்போம்’ எனும் தொனிப் பொருளில் மன்னாரில் எதிர்வரும் 10 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை அமைதிப் பேரணி ஒன்று முன்னெடுக்கப்படவுள்ளது. இதில் மன்னார் மாவட்ட மீனவர்கள், பொது அமைப்புகள் பூரண ஆதரவை வழங்கவேண்டும் என்று வடமாகாண கடற்றொழிலாளர் இணையத்தின் ஊடகப் பேச்சாளர் அன்னலிங்கம் அன்னராசா வேண்டுகோள் விடுத்துள்ளார்.

மன்னார் மக்களுக்கும் மீனவர்களுக்கும்,பாதிப்பாக இருக்கின்ற கனிய மணல் அகழ்வு, காற்றாலை மின் உற்பத்தி, இந்திய மீனவர்களின் அத்துமீறிய வருகை, சூழலுக்குப் பாதிப்பான பண்ணை செயற்பாடுகள் போன்றவற்றை நிறுத்தக் கோரி குறித்த பேரணி முன்னெடுக்கப்படவுள்ளது என்றும் அவர் மேலும் தெரிவித்தார். (ச-25-56)



Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

# மரண அறிவித்தல்

தோற்றம்
13 . 07 . 1945



மறைவு
04 . 09 . 2024

## வரதராஜா கருணாதேவி

சாவகச்சேரி, சங்கத்தானை, 2ம் ஒழுங்கை, இல. 21 ஐ சேர்ந்த வரதராஜா கருணாதேவி அவர்கள் கடந்த (04.09.2024) புதன்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற வரதராஜா (இலங்கை மின்சார சபை ஓய்வு நிலை பொறியியலாளர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற மார்க்கண்டு - சரஸ்வதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரியும், காலஞ்சென்ற நாகலிங்கம் - அன்னபூரணம் தம்பதியரின் அன்பு மருமகளும், நிர்மலாதேவி, வசந்தாதேவி ஆகியோரின் அன்புச் சகோதரியும், ரகுராம், பிரபுராம், ராஜாராம் ஆகியோரின் அன்புத் தாயாரும், நந்தினி, மஞ்சு, லதா ஆகியோரின் அன்பு மாமியாரும், விபூசன், பிரணவன், சங்கவி, மிதுரா, அஸ்வின்,சைவின் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்துமயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார் உறவினர் நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல் :
குடும்பத்தினர்
077 085 6058

இல. 21, 2ம் ஒழுங்கை,
சாங்கத்தானை, சாவகச்சேரி.

(CS/56107) J-1

# மரண அறிவித்தல்



## கதிரவேலு ஜீவந்தன் (உதயன்)

சாவகச்சேரி, நுணாவில் கிழக்கைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட கதிரவேலு ஜீவந்தன் (உதயன்) அவர்கள் நேற்று முன்தினம் (05.09.2024) வியாழக்கிழமை 9.00 மணியளவில் இறைபதம் அடைந்தார்.

அன்னார் கதிரவேலு - மனோன்மணி தம்பதியரின் சிரேஷ்ட புதல்வனும், காலஞ்சென்றவர்களான பொன்னையா - லீலாவதி தம்பதியரின் மருமகனும், கலைமதி அவர்களின் அன்புக் கணவரும், அருணிகா, பிரனித் ஆகியோரின் பாசமிகு தந்தையும், சஞ்சியா, முகுந்தன் (பிரான்ஸ்), வினிஷா (லண்டன்), திலீபன் ஆகியோரின் அன்புச் சகோதரனும், அயன்ராஜ் (லண்டன்), ராஜலட்சுமி (பிரான்ஸ்), கார்த்திகா, விஜிதா (பிரான்ஸ்), சுதர்சன் ஆகியோரின் அன்பு மைத்துனரும், ஸ்ரீஹரி, ஸ்ரீநிஷா ஆகியோரின் பாசமிகு மாமனாரும், அனுசியா, சஞ்ஜய், சஜன், அஸ்வினி, கேசிகா, விபூசிகா ஆகியோரின் பாசமிகு பெரியப்பாவும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 809 6961

கோவில் வீதி,
நுணாவில் கிழக்கு, சாவகச்சேரி.

(CR/43179) J-1

# மேன்மைகள் பலவற்றை அளிக்கும் ஆவணிச் சதுர்த்தி



விநாயகப் பெருமானை மனம், மொழி, மெய்யன்பினால் துதித்து வணங்கும் விரதங்களில் முதன்மையானது ஆவணிச் சதுர்த்தி விரதமாகும். விநாயகப் பெருமான் அவதரித்த திருநாளும் ஆவணிச் சதுர்த்திதான்

**விரத மகத்துவம்**

சதுர்த்தி விரதம் இருப்பதால் விநாயகரின் அருள் பரிபூரணமாக கிடைக்கின்றது. இவ் விரதத்தின் சிறப்புப் பற்றி இமய மலையரசன் இமவரின் தனது மகளாகப் பிறந்த உமாதேவியாருக்கு எடுத்துரைப் பதிலிருந்து நன்கு அறிய முடிகின்றது.

கொடுத்ததும் எல்லாவகையான துன்பங்களையும் போக்கக்கூடியதும், எல்லாப் பொருள்களையும் வழங்கத்தக்கதும் ஆகிய பலவகையான சிறப்புகளையுடைய நோன்பு ஒன்று இருக்கின்றது. அந் நோன்பு முழுமுதற் கடவுளாக விளங்கும் ஆனைமுகக் கடவுளுடைய சதுர்த்தி விரதமாகும். அந் நோன்பைக் கடைப்பிடித்தால் எண்ணிய எண்ணியாங் கெய்துதல் திண்ணம் என அதன் சிறப்பினை இமவான் எடுத்துரைத்தார்.

இவ்வாறாக சதுர்த்தி விரதத்தினை மேற்கொள்வதால் தெய்வ நம்பிக்கை அதிகமாகின்றது. ஒழுக்கமும், கட்டுப்பாடுகளும் ஏற்படுகின்றன. உடல் ஆரோக்கியம் ஏற்படுகின்றது. ஆயுள் அதிகமாகின்றது. பிரச்சினை கள் குறைகின்றன. தனிமனிதன் நன்மை பெறுவதால் அவன் குடும்பம் நன்மை பெறுகிறது. இரக்கசிந்தனை, தருமம் செய்யும் குணம் ஆகியவை வளருகின்றன.

**குமார சஷ்டி விரதம்**

கார்த்திகை மாதம் கிருஷ்ண பட்சம் பிரதமை முதல் மார்கழி மாதம் சுக்கில பட்சம் சஷ்டி திதி வரையில் இருபத்தொரு நாள் அனுஷ்டிப்பது.

**சங்கடஹர சதுர்த்தி**

மாசி மாதம் தேய்பிறையில் செவ்வாய்க்கிழமையோடு வரும் சதுர்த்தியில் தொடங்கி ஓராண்டு விதிப்படி அனுஷ்டிப்பது.

**சதுர்த்தி மகிமை**

கணபதியை வழிபடுவதற்கு மிகவும் முக்கியமானது இது. இது சுக்கில சதுர்த்தி எனவும், கிருஷ்ண சதுர்த்தி என்றும் மாதம் இரண்டுமுறை வரும். சுக்கில பட்ச சதுர்த்தியில் பகல் பூசையும், விரதமும் விசேடம். கிருஷ்ண பட்ச சதுர்த்தியில் இரவு பூசையும், விரதமும் விசேடமானது. இக்காலங்களில் விநாயகப் பெருமானை வழிபட்டு நல்வாழ்வு பெறுவோமாக.

மதுரகவி
காரை.எம்.பி.
அருளானந்தன்


## பொதுக் கூட்டமும் புதிய நிர்வாகத் தெரிவு

இடம் : வழுக்கையாறு இந்து மயானம்
காலம் : வெள்ளிக்கிழமை காலை 11.00 மணி 13.09.2024

நடைபெறும் பொதுக்கூட்டத்திற்கு இந்துமயானத்துடன் தொடர்பான சகல பொதுமக்களும் வருகை தருமாறு அன்புடன் வேண்டிக்கொள்கின்றோம்.

வழுக்கையாறு இந்து மயான
அபிவிருத்திச் சங்கம்

## Apartment விற்பனைக்கு

வெள்ளவத்தை IBC Road இல்
4 Bedrooms, Duplex Apartment
மற்றும் 3 Bedrooms Apartment உடனடி
விற்பனைக்கு உண்டு. No Brokers P/S
Contact: 077 522 2613

(CR/43152) J-1

## விதை நெல் விற்பனைக்கு

இயந்திரத்தினால் சுத்திகரிக்கப்பட்ட அதிகூடிய விளைச்சலைக் கொண்ட மூன்றரை மாத B.G.34.6, மூன்று மாத V.G.312 இன
விதை நெல் விற்பனைக்கு உண்டு.
077 659 2044

(CR/43162) J-1


# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம்
16 . 06 . 1938



மறைவு
20 . 08 . 2023

அமரர்

## பொன்னம்பலம் ஐயா பரிபூரணம் அம்மா

திதி : பூர்வபக்க சதுர்த்தி

ஐயிரண்டு திங்கள் அடிவயிறு நொந்து
மெய் வருத்தி என்னை மேதினிக்கு தந்தீர் !
ஆறிரண்டு திங்கள் ஆகிப்போனதம்மா
அமரராகி நீங்கள் அரனடியை சேர்ந்து !
ஏழிரண்டு ஜென்மங்கள் எடுத்தாலும் கூட
ஆறாது துயரம் அழியாது சோகம் !
ஏதுமற்று போனோமம்மா ஏதிலிகளானோம் !
எட்டாத உலகம் நீங்கள் எட்டிவிட்ட போதும்
நாதியற்ற எம் நெஞ்சில் நாளும் பொழுதும் உம் நினைவே !
அரனடியில் நீங்கள் அமைதி பெற வேண்டி
சிவனடியை தொழுகின்றோம் !

ஓம் சாந்தி ! சாந்தி !! சாந்தி !!!

சிவன் கோவிலடி,
சாவகச்சேரி.

(CR/43174) J-1

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பெருவிழா ஆரம்பம்

நீர்வேலி ஸ்ரீ அரசகேசரிப் பிள்ளையார் ஆலய வருடாந்தப் பெருவிழா இன்று சனிக்கிழமை நண்பகல் 12 மணியளவில் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகிறது. (ம-66)


## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் அல்லைப்பிட்டியில் பிரதான வீதி முகப்புடன் 110 பரப்பு (நிலப்பரப்பு) காணி விற்பனைக்கு**

- யாழ்ப்பாணத்திலிருந்து ஊர்காவற்றுறை செல்லும் பிரதான காப்பற் வீதி முகப்புடன்
- அல்லைப்பிட்டி சந்திக்கு அருகாமை
- சர்வதேச ஆங்கில பாடசாலை அருகாமையில்
- பெற்றோல் செட் திருமண மண்டபங்கள் வியாபார நிலையங்கள் வீடுகள் அமைக்க உகந்த காணி.
- நன்னீர் ஊற்று நிலம்
- 5 பரப்பாகவும், 3 பரப்பாகவும், 2 பரப்பாகவும் பிரிக்கப்பட்ட நிலையில்
- சீரான ஆவணங்கள்
- யாழ்நகரில் இருந்து 4 km தூரத்தில்

**பார்வையிடும் நேரம் காலை 8.00 மணி முதல் மாலை 6.00 மணி வரை**

தொடர்பு : 077 623 4204 / 077 030 2523



## தவறவிடப்பட்டுள்ளது

பூநாறி வீதிக்கும், யாழ்ப்பாணம் சிவன் கோயில் வீதிக்கும் இடைப்பட்ட பிரதேசத்தில் பாலசிங்கம் குபேந்திரன் என்பவரது (621740903V) தேசிய அடையாள அட்டையும் NSB வங்கி புத்தகமும் தவறவிடப்பட்டுள்ளது. கண்டெடுத்தவர்கள் தொடர்பு கொள்ளவும். தகுந்த சன்மானம் வழங்கப்படும்.

தொடர்பு: 077 272 7714


# அநுரவின் மாற்றத்தை தமிழர் எப்படி நம்புவது?

## சட்டத்தரணி சிறீகாந்தா கேள்வி



யாழ்ப்பாணம், செப். 7

**தமிழ் மக்களின் நீண்டகால இனப்பிரச்சினைக்கு அரசியல் தீர்வை தமது தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்க முடியாத ஜனாதிபதி வேட்பாளர் அநுரவை, தமிழ்மக்கள் எவ்வாறு நம்பி வாக்களிக்கமுடியும் - இவ்வாறு நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும் மூத்த சட்டத்தரணியுமான ந. ஸ்ரீகாந்தா கேள்வி எழுப்பியுள்ளார்.**

அவர் மேலும் தெரிவிக்கையில்:

தமிழ் மக்களால் மறக்கமுடியாத ஜே.வி.பி. தற்போது (தேசிய மக்கள் சக்தி) என்ற பெயருடன் ஜனாதிபதி வேட்பாளர் அநுர களம் இறங்கியுள்ளார்.

வடக்கு - கிழக்கு தமிழ் மக்களை சட்டரீதியாகப் பிரித்தவர்கள் தமிழ் மக்களிடம் மாற்றத்துக்காக வாக்களியுங்கள் எனக் கேட்கின்ற நிலையில் தமிழ் மக்கள் என்ன நம்பிக்கையில் வாக்களிக்கமுடியும்.

ஊழலை ஒழிக்கப் போகிறோம், நாட்டைச் சூறையாடிய வர்களுக்கு தண்டனை வழங்கப்போகிறோம் என அநுர கூறுவது நல்ல விடயம். அதைமட்டும் வைத்து தமிழ் மக்களின் வாக்குகளைப் பெற்றுவிடலாம் என நினைக்கக்கூடாது.

கடந்த காலங்களில் ஜனாதிபதி வேட்பாளராகக் களம் இறங்கிய சரத் பொன்சேகாவுக்கு தமிழ் மக்கள் வாக்களித்தமை மாபெரும் தவறு என்பதை தமிழ் மக்கள் தற்போது உணர்ந்துள்ளனர்.

ஆகவே தமிழ் மக்களின் இனப்பிரச்சினைக்கான தீர்வை முன்வைக்காத எந்தவொரு வேட்பாளரையும் தமிழ் மக்கள் ஆதரிக்கமாட்டார்கள் - என்றார். (ச-20.27)


## வேலைக்கு ஆள் தேவை

யாழ் நாவலர் வீதியில் அமைந்துள்ள சுப்பர் மார்க்கெட் ஒன்றிற்கு பின்வரும் வேலையாட்கள் தேவை.

1. கணக்காளர் (Accountant)
2. Computer Billing
3. விற்பனைப் பிரதிநிதி (Sales Assicstant)
4. காசாளர் (Cashier)

யாழ் மாநகர சபைக்குட்பட்டவர்கள் விரும்பத்தக்கது வயது எல்லை 18-35 வரை

(CS 1281) V-1

தொடர்பு: 077 419 5015


## ஊவாவுக்கு புதிய ஆளுநர்

கொழும்பு, செப். 7

ஊவா மாகாணத்தின் புதிய ஆளுநராக அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார். ஏ.ஜே.எம். முஸம்மில் பதவி விலகியமை காரணமாக ஏற்பட்ட வெற்றிடத்துக்காக அநுர விதானகமகே நியமிக்கப்பட்டுள்ளார். உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்த நியமனத்தை வழங்கியுள்ளார். (ச)

## வயோதிபர் உயிரிழப்பு

யாழ். போதனா மருத்துவமனையின் கிளினிக் வரிசையில் இருந்த வயோதிபர் ஒருவர் மயங்கிச் சரிந்து உயிரிழந்துள்ளார். கல்லடி ஒழுங்கை, நுணாவில் கிழக்கைச் சேர்ந்த பாலசிங்கம் பாலகாந்தன் (வயது - 75) என்பவரே இவ்வாறு உயிரிழந்தவராவார். (ம-100)


## மரண அறிவித்தல்



### திருமதி தனலட்சுமி சுப்பிரமணியம்

யாழ்ப்பாணம் மூளாயை பிறப்பிடமாகவும் கொழும்பை வசிப்பிடமாகவும் கொண்ட தனலட்சுமி சுப்பிரமணியம் அவர்கள் நேற்றுமுன்தினம் (05.09.2024) வியாழக்கிழமை அதிகாலை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கோவிந்தர் - லோகாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான அரியரத்தினம், இரத்தினசபாபதி, தம்பிராசா, தங்கம்மா மற்றும் பரமநாதன், தேவநாதன் ஆகியோரின் சகோதரியும், காலஞ்சென்ற சுப்பிரமணியம் அவர்களின் பாசமிகு மனைவியும், பாலகிருஷ்ணன் (ராசா), குமுதினி ஆகியோரின் அன்புத் தாயாரும், ஹரப்பிரியா, ஜனார்த்தனராஜா ஆகியோரின் அன்பு மாமியாரும், தீபக், கனிகா, நிஷாந்தன், மதூரிகா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.


அன்னாரின் பூதவுடல் அஞ்சலிக்காக மஹிந்த மலர்ச்சாலையில் நேற்று (06.09.2024) வெள்ளிக்கிழமை காலை 09 மணி தொடக்கம் இரவு 08.00 மணி வரை வைக்கப்பட்டு, பின்னர் மூளாயில் உள்ள அன்னாரின் இல்லத்தில் இன்று (07.09.2024) சனிக்கிழமை அஞ்சலிக்காக வைக்கப்பட்டு நாளை (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை காலை 09.00 மணியளவில் இ[illegible]கள் நடைபெற்று பிற்பகல் பித்தனை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இ[illegible] உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல் :
குடும்பத்தினர்
077 226 9264

(CS/28594) J-1



## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 18.09.1949 — மறைவு 20.08.2023

### அமரர் ஆறுமுகம் தவராசா

கண் முன்னே வாழ்ந்த காலம்
கனவாகிப் போனாலும்
எங்கள் முன்னே உங்கள் முகம்
எந்நாளும் உயிர் வாழும்
மண் விட்டு மறைந்து
நீங்கள் விண் நோக்கிச் சென்றாலும்
கண் விட்டு மறையாது
உங்கள் நினைவுகள்

அன்னை இல்லம்
[illegible]டை வீதி,
கொக்குவில் மேற்கு,
கொக்குவில்.

குடும்பத்தினர்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பலாலி விமான நிலையம்

# பெயரளவில் இல்லாமல் சர்வதேச தரமாக்கப்படும்



**யாழ்ப்பாணம், செப். 7**
**யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என இயங்கி வரும் பலாலி விமான நிலையம், சர்வதேச விமான நிலையத்துக்கு உரிய தரத்துடன் அபிவிருத்தி செய்யப்படும்- இவ்வாறு தேசிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க தெரிவித்தார்.**

உதயன் பணிமனைக்கு வருகைதந்த அவரிடம், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையம் என்ற பெயரில் பலாலி விமான நிலையம் இயங்குகின்றது. இந்த விமான நிலையத்தை சர்வதேச தரத்துடனான விமான நிலையமாக அபிவிருத்தி செய்வீர்களா என்று கேட்ட போது,

நாம் சுற்றுலாத்துறையை பிரதானமாக நம்பியிருக்கின்றோம். இந்தியாவில் நடுத்தர வர்க்கத்தினர் சுமார் 40 மில்லியனுக்கு அதிகமானவர்கள் இருக்கின்றார்கள். அப்படியானவர்களை இலங்கைக்கு சுற்றுலாவுக்கு அழைக்க வேண்டும் என்றால் நாம் அவர்களுக்கு அருகிலுள்ள விமான நிலையங்களை உரிய தரத்துடன் அபிவிருத்தி செய்யவேண்டும். எங்கள் திட்ட இலக்கில் கூட, பலாலி விமான நிலையத்தை சர்வதேச தரத்துக்கு ஏற்றவாறு அபிவிருத்தி செய்வதை உள்ளடக்கியுள்ளோம்- என்றார். (ஒ.5)



## காக்கைகளின் எச்சத்துடன் தனிநாயகம் அடிகள் சிலை

மன்னார், செப்.7
மன்னார் நகர மத்தியில் அமைக்கப்பட்டிருக்கும் தமிழ் வளர்த்த பெருந்துறவியான தமிழ்த் தூது தனிநாயகம் அடிகளாரின் நினைவுத்தூபியானது காக்கைகளின் எச்சம் நிறைந்து கவனிப்பாரற்றுள்ளதாகப் பொது மக்கள் குற்றஞ்சுமத்தியுள்ளனர்.
தமிழ்த்தூது தனிநாயகம் அடிகள் என்கிற வண. சேவியர் தனிநாயகம் அடிகளார் ஈழத் தமிழர்களின் தமிழ் வளர்ச்சி பாதுகாப்பில் பெரும் பங்காற்றி தமிழுக்காக உயிர் நீத்தவர்.
அவரது நினைவு தினத்தில் மாத்திரம் நினைவுத்தூபிக்கு மலர் மாலை போட்டு அஞ்சலி செலுத்தப்பட்டு வருகிறது. பின்பு கவனிப்பாரற்றநிலையில் கைவிடப்படுகிறது.
மன்னார் பொது நூலக வளவுக்குள் அமைக்கப்பட்டிருக்கும் அவரின் நினைவுத்தூபி தற்போது காகங்கள், கொக்குகளின் எச்சங்களால் அசுத்தமாகி கேட்பாரின்றிக் காணப்படுகிறது என்றும் மக்கள் சுட்டிக் காட்டியுள்ளனர். (ச-213)



## இந்தியத் துணைத்தூதுவர் மாவட்டச் செயலர் சந்திப்பு

யாழ்ப்பாணம், செப்.7
யாழ். இந்தியத் துணைத்தூதுவர் சாய்முரளி கடந்த புதன்கிழமை நண்பகல் கிளிநொச்சி மாவட்டப் பதில் செயலர் எஸ். முரளிதரனை மாவட்டச் செயலர் காரியாலயத்தில் சந்தித்துக் கலந்துரையாடியுள்ளார்.
குறித்த சந்திப்பின்போது இந்திய அரசாங்கத்தினால் வடபகுதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்ற அபிவிருத்தித் திட்டங்கள் மற்றும் கிளிநொச்சி மாவட்ட மக்களின் வாழ்வாதார நடவடிக்கைகள் தொடர்பில் கலந்துரையாடப்பட்டன. இந்திய அரசாங்கத்தினால் முன்னெடுக்கப்பட்டுவரும் பயிற்சித் திட்டங்கள் தொடர்பிலும் இதன்போது கலந்துரையாடப்பட்டது. (ச-66)

## டெங்கு பரவும் சூழல்: இருவருக்கு அபராதம்


யாழ்ப்பாணம், செப்.7
டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த இரண்டு வீட்டின் உரிமையாளர்களுக்கு தலா 7 ஆயிரத்து 500 ரூபா வீதம் அபராதம் விதித்து தீர்ப்பளித்தார் பருத்தித்துறை நீதிமன்ற நீதிவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை.
புலோலிப் பகுதியில் அண்மையில் சுகாதாரப் பரிசோதகர்களால் வீட்டுத் தரிசிப்புகள் மேற்கொள்ளப்பட்டன.
இதன்போது டெங்கு பரவும் சூழலை வைத்திருந்த இரண்டு வீட்டு உரிமையாளர்கள் மீது பருத்தித்துறை சுகாதாரப் பரிசோதகரால் நேற்று வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (ச-100)

## கள் விற்ற 7 பேருக்கு தண்டம்

யாழ்ப்பாணம், செப்.7
சட்டவிரோதமான முறையில் கள்ளை விற்பனை செய்த ஏழு பேருக்கு தலா 5000 ரூபாவீதம் அபராதம் விதித்து பருத்தித்துறை நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.
பருத்தித்துறை மதுவரித் திணைக்களத்தினரால் ஏழு பேருக்கு எதிராக நேற்று வெள்ளிக்கிழமை வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது.
இதன்போது ஏழு பேரும் குற்றத்தை ஒப்புக்கொண்டதை அடுத்து 5000 ரூபா வீதம் அபராதம் விதித்துத் தீர்ப்பளிக்கப்பட்டது. (ச-100)

## மாணவிகளுக்கு சுகாதாரப் பொதிகள்

கிளிநொச்சி, செப்.7
இலங்கை குடும்பத் திட்டமிடல் சங்கத்தின் ஏற்பாட்டில் கிளிநொச்சி முருகானந்தா கல்லூரியை சேர்ந்த மாணவிகளுக்கு கட்டிளமைக் கால பாதுகாப்பு மற்றும் பராமரிப்பு தொடர்பான கருத்தூட்டல் கருத்தரங்கு நடத்தப்பட்டதுடன், சுகாதாரப் பொதிகளும் கடந்த புதன்கிழமை வழங்கி வைக்கப்பட்டன. (ச-45-13)



## நல்லிணக்க ஆணைக்குழு படையினரைத் தண்டிக்காது

*அசங்க குணவன்ச தெரிவிப்பு*



யாழ்ப்பாணம், செப்.7
உண்மை மற்றும் நல்லிணக்க இடைக்கால ஆணைக்குழு யுத்த வெற்றி வீரர்களின் மீது நடவடிக்கை எடுக்கும் நோக்கில் அமைக்கப்படவில்லையென அதன் நிறைவேற்றுப்பணிப்பாளர் ஜனாதிபதி சட்டத்தரணி அசங்க குணவன்ச தெரிவித்துள்ளார்..
இலங்கை நீதிமன்ற சட்டங்களின் கீழ் குற்றங்கள் தொடர்பான விவரங்களைத் திரட்டுவதும் விசாரணை செய்வதுமே ஆணைக்குழுவின் பணி. குற்றச்சாட்டுகள் தொடர்பாக ஆதாரங்களைத் திரட்டிய பின் இலங்கை சட்டங்களின் கீழ் நீதிமன்ற விசாரணை நடைபெறும் நீதிமன்றத்தில் குற்றம் நிரூபிக்கப்படும் வரை ஒருவர் நிரபராதியே என்றும் அவர் தெரிவித்துள்ளார். (ச-6)



## கண்காணிப்புக் குழு திருகோணமலையில்

கொழும்பு, செப்.7
ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்புக் குழு பிரதிநிதிகள் நேற்றுமுன்தினம் வியாழக்கிழமை திருகோணமலை மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ச. குகதாசனை தமிழரசுக் கட்சி மாவட்டப் பணிமனையில் சந்தித்தனர்.
சந்திப்பின் போது ஜனாதிபதித் தேர்தல் நிலைவரங்கள்பற்றியும், திருகோணமலை மாவட்டத்தில் தமிழர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு சிக்கல்கள் பற்றியும் கலந்துரையாடினர். (ச)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஆண்டு நிறைவு விழா!

யாழ்ப்பாணம், செப். 7


நாவற்குழி சரஸ்வதி சனசமூக நிலையத்தின் 63ஆவது ஆண்டு நிறைவு விழாவினை முன்னிட்டு யாழ். மாவட்ட ரீதியிலான மரதன் போட்டி இன்று சனிக்கிழமை காலை 6 மணிக்கு இடம்பெறவுள்ளது.

சைக்கிள் ஓட்டப்போட்டி நாளை ஞாயிற்றுகிழமை காலை 6 மணிக்கு நிலைய முன்றலில் ஆரம்பமாகும்.

அதனைத் தொடர்ந்து சாந்தை விநாயகர் அணிக்கும், சண்டிலிப்பாய் உதய சூரியன் அணிக்கும் இடையிலான தாச்சிபோட்டியின் இறுதி சுற்று விளையாட்டு கழக மைதானத்தில் இரவு 7 மணிக்கு இடம்பெற வுள்ளது. (ம-22)



கிளிநொச்சி -முழங்காவில் மகா வித்தியாலய க.பொ.த. உயர்தர மாணவர்களுக்கான தொழில் வழிகாட்டல் கருத்தரங்கு அண்மையில் நடைபெற்றது. கிளிநொச்சி தெற்கு வலயக் கல்வி அலுவலக ஆலோசனை மற்றும் வழிகாட்டல் ஆசிரிய ஆலோசகர் புஸ்பராணி ஆனந்தசிவம் மற்றும் ஆசிரியர்களான வி.மதிசங்கர், என்.சுஜீதரன் ஆகியோர் வளவாளர்களாகக் கலந்துகொண்டனர். (ச-159)



## இரதோற்சவம்

யாழ்ப்பாணம், செப்.7

கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன விநாயகர் ஆலயத்தின் வருடாந்த மஹோற்சவத்தின் தேர்த்திரு விழா நேற்று வெள்ளிக்கிழமை மு.ப10 மணிக்கு நடைபெற்றது. (ரி-66)

# மந்த போஷணையை தடுக்க அரசாங்கம் தவறிவிட்டது!

சஜித் தெரிவிப்பு

ஜனாதிபதி நிதியத்துக்கு கோடிக்கணக்கான பணம் ஒதுக்கப்பட்டாலும், மந்த போஷணையை இல்லாமற்செய்வதற்கு அரசாங்கத்தால் நிதியொதுக்க முடியாமற்போயுள்ளது என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ சுட்டிக்காட்டியுள்ளார்.

இலங்கையில் சிறுவர்களுக்கான மந்த போஷணை நிலைமை அதிகரித்துக்காணப்படுகின்றது. ஆய்வுகளின்படி வீடுகளில் நான்கில் ஒருபங்கு நடுத்தரமான அளவில் உணவுப் பாதுகாப்பின்மையை எதிர்நோக்கி வருகின்றன.

ஐந்து வயதுக்குக் குறைந்த குழந்தைகளின் வளர்ச்சி குறைபாடு (உயரம் குறைவு) 19.3 ஆக அதிகரித்துள்ளது. இது கடந்த ஆண்டை விட 9.2% ஆல் அதிகரித்துள்ளது.

இந்த சிக்கலான நிலைக்கு அரசாங்கத்திடம் போஷ ணைக் கொள்கைத்திட்டம் ஒன்றுமில்லை. இந்த இலக்கை பூரணப்படுத்துவதற்கான வேலைத்திட்டங்கள் அவசியமாகும். இதனைக் கண்காணிப்பதற்கான முறையொன்றும் இருக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டார். (ச-இ)

# தமிழரசின் முடிவால் வாக்கில் தாக்கமில்லை

சித்தார்த்தன் எம்.பி. தெரிவிப்பு

யாழ்ப்பாணம், செப் 7

தமிழரசுக் கட்சி அறிவித்த முடிவால், தமிழ்ப் பொது வேட்பாளரின் வாக்கில் தாக்கம் இருக்காது என நாடாளுமன்ற உறுப்பினர் த. சித்தார்த்தன் தெரிவித்துள்ளார்.

யாழ்ப்பாணத்தில் நேற்று வெள்ளிக்கிழமை தமிழ் பொது வேட்பாளருக்கான பரப்புரைக் கூட்டத்தில் கலந்துகொண்ட பின்னர் ஊடகங்களுக்குக் கருத்து தெரிவிக்கும்போதே அவ்வாறு தெரிவித்தார்.

தமிழரசுக் கட்சியினர் முழுமையாக சஜித் பிரேமதஸவுக்கு ஆதரவு வழங்கவில்லை. அக்கட்சியின் நாடாளுமன்ற உறுப்பினர் சிறீதரன் தற்போதும் தமிழ்ப் பொது வேட்பாளருக்கே தனது ஆதரவை தெரிவித்து வருகின்றார் . தமிழரசுக் கட்சியினர் சஜித்துக்கு ஆதரவு என தெரிவித்துள்ளமை, தமிழ் பொதுவேட்பாளரின் வாக்கில் தாக்கம் செலுத்தாது என்றும் அவர் தெரிவித்தார். (ச-20)

# சஞ்சிகை வெளியீடும் கவியரங்கமும்

யாழ்ப்பாணம், செப்.7

முத்தமிழ்ச் சங்கத்தின் இலக்கிய கல்வியினூடாக வாசிப்பின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் யோகம் சஞ்சிகை வெளியீடும், கவியரங்கமும் யாழ்.கைதடி அ.த.க. பாடசாலை ஆசிரியர் திருமதி உ.வளர்மதி தலைமையில் யாழ்.கைதடி அ.த.க. பாடசாலையில் நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 9மணி தொடக்கம் மு.ப.11மணி வரை நடைபெறவுள்ளது.

வெளியீட்டுரையை முத்தமிழ்ச்சங்கம் பொருளாளர் ப.மதீசன் நிகழ்த்த வுள்ளார்.

நிகழ்வில் 'தமிழ்க்குமரனும் வாழ்வியலும்' எனும் கவியரங்கம் புயல்நேசன் தலைமையில் 'இயற்கையும் தமிழ்க்குமரனும்' ரஜிதா அரிச்சந்திரன், 'அகமும் தமிழ்க்குமரனும்' சங்கரி சிவகணேசன், 'புறமும் தமிழ்க்குமரனும்' பாரதி மைந்தன் மற்றும் 'பக்தியும் தமிழ்க்குமரனும்' யோ.பிரவீன்ராஜ் ஆகியோர் நிகழ்த்த வுள்ளனர். (ரி)

# தோல்வியை சந்தித்தாலும் உரிமைக்குப் போராடுவோம்


தமிழர் விடுதலைக் கூட்டணி அழைப்பு

வவுனியா,செப்.7

இந்த முறை எமக்கு ஒரு புதிய தெம்பு பிறந்துள்ளது. வெற்றி பெறப்போவதில்லை எனத் தெரிந்து கொண்டே நாம் ஒரு வேட்பாளருக்கு வாக்களிக்கப் போகிறோம். எமது வலிகளையும் வேதனைகளையும் இந்த உலகுக்கு உரக்கச் சொல்லப்போகிறோம் என்று தமிழர் விடுதலைக் கூட்டணியின் தலைவர் தெரிவித்துள்ளார். ஈழத் தமிழர்கள் கடந்த 15 ஆண்டுகளாக அரசியல் அநாதைகளாக அலைந்துதிரிகிறார்கள். நாம் நம்பிய அனைவருமே தேர்தல்களின் பின்னர் எம்மை ஏமாற்றியே வருகிறார்கள். வெற்றி பெறும்வரை எமது தமிழ்த் தேசிய விடுதலைப் போராட்ட உணர்வுகளை அடுத்த அடுத்த தலைமுறைக்கு ஊட்டுவது எமது வரலாற்றுக்கடமை. எமது ஆதரவு தமிழ்ப் பொதுக் கட்டமைப்பின் ஜனாதிபதி வேட்பாளர் அரியநேத்திரனுக்கே என்றும் அவர் குறிப்பிட்டார். (ச)

# மரண அறிவித்தல்

தோற்றம்
26 . 02 . 1951



மறைவு
06 . 09 . 2024

## அமரர் சந்திரசேகரம் குகராஜன்

(ஓய்வு பெற்ற செஞ்சிலுவை சங்கத்தின் நிர்வாக உத்தியோகத்தர்)

அராலி செட்டியார் மடத்தை பிறப்பிடமாகவும் கொழும்புத்துறையை வசிப்பிடமாகவும் கொண்ட சந்திரசேகரம் குகராஜன் நேற்று 06.09.2024 வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்ற சந்திரசேகரம் மனோரஞ்சிதம் தம்பதியினரின் மகனும், காலஞ்சென்ற ராஜகாந்தி மற்றும் ராஜேஸ்வரியின் மருமகனும், காலஞ்சென்ற சுகுணதேவியின் பெறாமகனும், உஷா நாகேஸ்வரியின் கணவரும், தேவராஜன், யோகராஜன், கோமதி, சாந்திமதி ஆகியோரின் சகோதரரும் மீரா, துளசி, கண்ணன், துவாரகா ஆகியோரின் தந்தையும், நிருபராஜ், பிரம்மேந்திரா, கார்த்திகா, சிறீ ஜனார்த்தனன் ஆகியோரின் மாமனாரும் அதியன், அண்டிரன், ஓரி, அரி, வர்சினி, கிருஸ்லா, சேயோன், தேவ் மித்திரனின் பாட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை மறுதினம் (09.09.2024) திங்கட்கிழமை முற்பகல் 07.00 மணியளவில் கொழும்புத்துறையிலுள்ள அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று தகனக்கிரியைகளுக்காக முற்பகல் 10.00 மணியளவில் துண்டி மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

தகவல்: மனைவி
கு. உஷா நாகேஸ்வரி
269, கொழும்புத்துறை வீதி,
சுண்டுக்குளி.
+94772830973
+94777162763

(GS 1285) V-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கொள்கை...

கொண்டு உரையாற்றும் போதே எதிர்க் கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ மேற் கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

"இன, மத, குல, வகுப்பு, கட்சி பேத மின்றி இளைஞர்களுக்காகப் பாடுபடும் அரசை நாம் தோற்றுவிப்போம். யாருக் கும் அடிமைப்படாத வாழ்க்கையை அமைத்துக்கொள்ள இளைஞர்களுக்கு வரய்ப்பளிக்கப்படும். நாம் ஒரு மில்லி யன் தொழில் முனைவோர்களை உரு வாக்குவோம். ஒரு மில்லியன் தொழில் முனைவோர்களை உருவாக்குகின்ற போது அவர்கள் பொருளாதார வளர்ச்சி யின் முன்னேற்றத்திலும் பொருளாதார அபிவிருத்தியிலும் பங்காளர்களாக மாறுவதோடு, தலைவர்களாகவும் மாறு வார்கள்.

அறிவை மையப்படுத்திய பொருளாதா ரத்தை கட்டி எழுப்புகின்ற இந்தப் பயணத் தில், பலவிடயங்களை இந்தியாவிடமிருந்து கற்றுக்கொள்ள வேண்டியிருக்கின்றது. இந்தியாவைப் போன்று பல கல்வி நிலை யங்களை எமது நாட்டிலும் உருவாக்கு வோம். அதன் ஊடாகக் கல்வி கற்ற சிந்தனையுள்ள வருமானத்தில் முன் னேற்றமடைந்த நடுத்தர வர்க்கம் ஒன்று உருவெடுக்கும். அந்தப் பயணத்திற்காக எமது நாட்டு இளைஞர்களுக்கு தேவை யான சலுகைகள் வழங்கப்படும்.

இளைஞர் அபிவிருத்தி மத்திய நிலை யங்கள் உருவாக்கப்பட்டு, அதன் ஊடாக ஆங்கிலம் மற்றும் சர்வதேச மொழிக ளையும் ஏனைய அறிவையும் கணினி விஞ்ஞானத்தையும், செயற்கை நுண் ணறிவு உள்ளிட்ட புதிய தொழில்நுட்ப அறிவையும், பெற்றுக் கொடுப்போம்" - என்றார். (அ-ம)

## வலைத்தளங்களில்...

என்று எச்சரிக்கப்பட்டுள்ளது. தற்போது தேர்தல்காலம் என்பதால், மக்கள் தேவை யற்ற பதிவுகளைத் தவிர்த்துக் கொள்ள வேண்டும். சமூக வலைத்தளங்களில் ஆயிரக் கணக்கான போலிக் கணக்கு கள் உருவாக்கப்பட்டு, வேட்பாளர்கள் தொடர்பில் அவதூறு பரப்பப்படுவது அவ தானிக்கப்பட்டுள்ளது. அத்தகை நடவ டிக்கைகளில் ஈடுபடவேண்டாம் என்றும், அவ்வாறான நடவடிக்கைகளை ஊக்கு விக்க வேண்டாம் எனவும் நாம் கேட்டுக் கொள்கின்றோம் என இலங்கை கணினி அவசர தயார்நிலைக்குழு மையத்தின் சிரேஷ்ட தகவல் பாதுகாப்பு அதிகாரி அறிவுறுத்தியுள்ளார்.

வேட்பாளர்களுக்கு எதிராகத் தொடர்ச்சி யாக அவதூறுகளை முன்வைக்கும் கணக்குகள் தொடர்பான தகவல்கள் குற்றப்புலனாய்வுத் திணைக்களத் துக்குப் பாரப்படுத்தப்படும். எனவே, திட் டமிட்டு சேறுபூசல் நடவடிக்கைகளை மேற்கொள்வோர் தேர்தல் விதிமுறை மீறல் சட்டங்களின் கீழ் தண்டிக்கப்படுவ துடன், குற்றப்புலனாய்வுத் திணைக்க ளத்தின் விசாரணைகளையும் எதிர் கொள்ள வேண்டியிருக்கும் என்றும் இலங்கை கணினி அவசர தயார்நிலைக் குழு மையத்தின் சிரேஷ்ட தகவல் பாது காப்பு அதிகாரி மேலும் தெரிவித்துள் ளார். (அ-ம-சி)

## இந்திய...

பட்டனர். வழக்கை விசாரணை செய்த நீதிவான் கிரிசாந்தன் பொன்னுத்துரை, மீனவர்கள் பத்துப் பேருக்கு எதிரான குற்றச்சாட்டுகளுக்கு தலா மூன்று மாதங் கள் சிறைத்தண்டனை விதித்து அதை 10 வருடங்களுக்கு ஒத்திவைத்து மீனவர் களை விடுவித்துள்ளார். படகோட்டிக்கு ஆறு மாதகால சாதாரண சிறைத் தண் டனை விதித்து அதையும் பத்து வருடங் களுக்கு ஒத்திவைத்து அவரையும் விடு வித்து உத்தரவிட்டுள்ளார். (அ-ம-100)

## மயங்கி...

பரிசோதித்த மருத்துவர்கள் அவர் முன் னதாகவே உயிரிழந்துவிட்டார் என்று தெரிவித்துள்ளனர். மேலதிக விசார ணைகளை சாவகச்சேரி பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (அ-ம-9)

## சங்கிலி...

பெண்ணிடம் தங்கச் சங்கிலியொன்று கொள்ளையிடப்பட்டுள்ளது. இது தொடர் பில் வவுனியா பொலிஸாரிடம் முறையி டப்பட்டது.

குறித்த முறைப்பாடு தொடர்பில் வவு னியா தலைமைப் பொலிஸ் பொறுப்பதி காரி ஜெயக்கொடியின் வழிகாட்டலில், உப பொலிஸ் பரிசோதகர் அகமட் தலை மையிலானகுழுவினர்விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதன்போது அநுராதபுரத்தை சேர்ந்த 31 வயதுடைய இளைஞர் சந்தேக நபராகக் கைதுசெய் யப்பட்டிருந்தார். அவரிடம் மேற்கொள்ளப் பட்ட விசாரணைகளின்போதே பல அதிர்ச் சியான தகவல்கள் தெரியவந்துள்ளன. விசாரணைகளின் அடிப்படையில், குறித்த இளைஞரிடம் இருந்து அநுராத புரத்தில் திருடப்பட்ட மோட்டார்சைக்கிள் ஒன்று மீட்கப்பட்டுள்ளதுடன், அந்த மோட்டார்சைக்கிளைப் பயன்படுத்தி அவர் பல இடங்களில் சங்கிலிக் கொள் ளையில் ஈடுபட்டு வருகின்றமை புலப்பட் டுள்ளது. இவ்வாறாக மிகக் குறுகிய காலத்தில் அவர் 9 பேரிடம் சங்கிலிகளை அறுத்துள்ளார். அத்துடன் சந்தேகநப ருக்கு எதிராக நீதிமன்றங்களில் 6 பிடி யாணைகளும் காணப்படுகின்றன. அவரை நீதிமன்றத்தில் முற்படுத்தும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள் ளன. அத்துடன் சந்தேகநபரிடம் இருந்து சங்கிலிகளைக் கொள்வனவு செய்தவர் களும் கைது செய்யப்பட்டுள்ளனர். (அ-ம-110-18)

## வன்முறைக்...

தாக்குதல்களை நடத்தியது. ஐந்து வய துக் குழந்தை, பெண்கள், பாலூட்டிக் கொண்டிருந்த இளம் தாய் என எந்தப் பாகுபாடும் இல்லாமல் அனைவர் மீதும் அவர்கள் தாக்குதல் நடத்தினார்கள். வீட் டுத் தளபாடங்கள் என்பனவும் அந்தக் குழுவின் வெறிச் செயலில் உடைக்கப் பட்டன. பிள்ளைக்குப் பால் கொடுக்கும் போது தாக்குதலுக்கு உள்ளான பெண் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை யில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள் ளார் என்று தாக்குதலுக்கு உள்ளானவர் கள் ஊடகங்களிடம் தெரிவித்தனர்.

விசாரணைகளை மேற்கொண்ட வட்டுக் கோட்டைப் பொலிஸார் சந்தேகநபராக ஒருவரைக் கைதுசெய்துள்ளனர். அவரி டம் மேலதிக விசாரணைகள் முன்னெ டுக்கப்பட்டு வருகின்றன. (அ-ம-27)

## ரயில்...

விதம் இடம்பெற்றுள்ளது. விபத்தில் கிளி நொச்சி - உமையாள்புரத்தைச் சேர்ந்த 58 வயதான நபரே படுகாயமடைந்த நிலையில் கிளிநொச்சி மாவட்ட பொது மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப் பட்டு யாழ்ப்பாணம் போதனா மருத்துவ மனைக்கு மாற்றப்பட்டுள்ளார். (அ-ம-113)

## ரணில்...

யாழ்ப்பாணத் துக்கு வருகைத ரும் ஜனாதிபதி ரணில், யாழ்ப்பா ணம் சங்கிலியன் பூங்காவிலும் வட மராட்சியிலும் இடம்பெறும் தேர் தல் பரப்புரைக ளில் கலந்துகொள் ளவுள்ளார். நல் லூர் ஆலயத்தி லும் அவர் வழிபா டுகளை மேற் கொள்ள வாய்ப்பி ருப்பதாகக் கருதப் படுகின்றது.

ஜனாதிபதித் தேர்த லின் பிரதான வேட் பாளரான அநுரகு மார திஸாநாயக்க, யாழ்ப்பாணத்துக்கு வருகைதந்து அர சாங்கத்துக்கு எதிராகக் கடும் விமர்சனங் களை முன்வைத்து தேர்தல் பரப்புரை யில் ஈடுபட்ட 24 மணிநேரத்தில் ஜனாதி பதி ரணிலின் யாழ்ப்பாணத்துக்கான பயணம் பெரிதும் எதிர்பார்ப்புகளை ஏற்படுத்தியுள்ளது. (அ-ம-26)


# காணி விற்பனைக்கு

யாழ்ப்பாணம் உரும்பிராயில் பிரதான காப்பெற் வீதி முகப்புடன்
**4 பரப்புக் காணி - நிலப்பரப்பு**
விற்பனைக்கு உண்டு.


- இரண்டு பரப்பாக பிரிக்கப்பட்டுள்ளது.
- உரும்பிராய்ச் சந்தியிலிருந்து 1/2 KM தூரம்.
- வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும், வீடு கட்டுவதற்கும் உகந்தது.
- உரும்பிராய்ச் சந்தியில் இருந்து கைதடிச் சந்தி செல்லும் பிரதான காப்பெற் வீதி முகப்புடன். தொடர்புகளுக்கு:

**077 2880 152**
**077 2941 521**

CS (28954) J-1


# மரண அறிவித்தல்

தோற்றம்
01 . 07 . 1955



மறைவு
05 . 09 . 2024

## முருகேசு தனபாலன்

**(முன்னாள் கணித ஆசிரியர் - சென் பற்றிக்ஸ் கல்லூரி, ஓய்வு நிலை உத்தியோகத்தர் - சுகாதாரத் திணைக்களம், கிளிநொச்சி , யாழ். இந்துக்கல்லூரி - பழைய மாணவன்)**

கந்தர்மடத்தைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட முருகேசு தனபாலன் அவர்கள் நேற்றுமுன்தினம் (05.09.2024) வியாழக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான முருகேசு - கனகேஸ்வரி தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தங்கராசா - சிவஞானசரஸ்வதி தம்பதியரின் பாசமிகு மருமகனும், காலஞ்சென்ற கோசலா (இளைப்பாறிய ஆசிரியை, யா/சென் ஜோன்ஸ் பொஸ்கோ, திருகோணமலை சென் மேரிஸ் கல்லூரி) அவர்களின் பாசமிகு கணவரும், தனுசலா (UK), சிவனுஜா (UK) ஆகியோரின் அன்புத் தந்தையும், சஞ்சு (UK), கபிலன் (UK) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவபாலன் (ஓய்வு நிலை பாதுகாப்பு உத்தியோகத்தர் - யாழ் பல்கலைக் கழகம்), காலஞ்சென்ற தேவபாலன் (ஜேர்மனி), குணபாலன் (UK), சந்திரபாலன் (சுவிஸ்), ஜீவச்சந்திரமணி (இலங்கை), சுந்தரபாலன் (UK), காலஞ்சென்ற கிருஷ்ணபாலன் (இலங்கை), நந்தபாலன் (நோர்வே), விஜயபாலன் (UK) ஆகியோரின் அன்புச் சகோதரனும், ராஜராஜேஸ்வரி, ராஜகுலதேவி, கௌரி, ராஜேஸ்வரி, ஞானதேசிகன் (ஓய்வு நிலை பிரதிஅதிபர் - யா.இ.க), கமலவதனி, பிரசாந்தினி, ஜெயந்தி ஆகியோரின் மைத்துனரும், டனிஷ் (UK), கிறிஷ் (UK), அனனிகா (UK) ஆகியோரின் அன்புப் பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 3.00 மணியளவில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

**தகவல்:**
**குடும்பத்தினர்.**
இல.7, புகையிரத வீதி,
கந்தர்மடம், யாழ்ப்பாணம்.
**076 250 5653**

(CS/56118) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ராஜபக்ச குடும்பத்தை அரசிலிருந்து விரட்டும் ரணில்!

கொழும்பு, செப். 7

மஹிந்த ராஜபக்ச, சமல் ராஜபக்ச, நாமல் ராஜபக்ச உட்பட ராஜபக்சக்கள் முகாமில் உள்ள 27 நாடாளுமன்ற உறுப்பினர்களை ஆளுங்கட்சியிலிருந்து நீக்குவதற்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நடவடிக்கை எடுத்துள்ளார் எனத் தெரியவருகின்றது.

இதன்பிரகாரம் அரசின் எந்தவொரு வேலைத்திட்டங்களிலும் அவர்கள் பங்கேற்கக்கூடாது என அறிவுறுத்தப் பட்டுள்ளது.

நாமல் ராஜபக்ச பக்கம் நிற்கும் 4 இராஜாங்க அமைச்சர்களின் பதவிகளை ஜனாதிபதி பறித்துள்ளார். ஏனைய நால்வரின் பதவிகளும் விரைவில் பறிக்கப்படவுள்ளது.

இந்நிலையிலேயே ராஜபக்ச முகாமில் உள்ள சிபி ரத் நாயக்க, சஞ்ஜீவ எதிரிமான்ன, சாகர காரியவசம், ஷசீந்திர ராஜபக்ச, நிபுண ரணவக்க உட்பட 27 நாடாளுமன்ற உறுப்பினர்களை அரசிலிருந்து நீக்கு வதற்கு முடிவெடுக்கப் பட்டுள்ளது. (ஓ–44)

## வேலையாட்கள் தேவை

கிளிநொச்சி நகரில் புதிதாக ஆரம்பிக்கப்படும் உணவகம் ஒன்றில் வேலையாட்கள் பின்வருமாறு

- வரவேற்பாளர் (ஆண்)
- சமையலாளர் (ஆண்)
- சமையல் உதவியாளர் (ஆண்)
- வெயிட்டர் (ஆண்)
- கிளீனர் (Cleaner) (ஆண்/பெண்)
- ரீ மேக்கர் (ஆண்)
- சோட்டீஸ் தயாரிப்பாளர் (ஆண்)
- அனைத்து பழ யூஸ் தயாரிப்பாளர் (ஆண்/பெண்)
- அக்கவுண்டன் (ஆண்/பெண்) O/L தகுதி
- ரைஸ் தயாரிப்பாளர் (ஆண்)
- அப்பம் தயாரிப்பாளர் (ஆண்)

(உடனடி வேலைவாய்ப்பு)

077 571 5111
077 928 2072

(CS/28901) J-1

## மூன்றாம் ஆண்டு நினைவலைகள்



பிறப்பு 18 . 11 . 1948

இறப்பு 07 . 09 . 2021

**அமரர் திருமதி சார்மதிதேவி சொர்ணலிங்கம் (சாருமதி அக்கா)**

அம்மா என் அன்புத் தெய்வமே!
ஆறாத் துயரில் கலங்குகின்றேன்
கனிவுடனே பல கதைகள் பேசி
காலையும் மாலையும் என் பெயர் கூறி அழைப்பீர்களே!

தனிமையைத் தந்து எமைத் தவிக்க விட்டு
தேற்ற யாருமின்றி வாடுகின்றேன் அம்மா
சுமையாகிப் போன வாழ்வை
சுமப்பதற்குத் திறனின்றி இருக்கின்றேன் அம்மா

ஊரவர்கள் பிரிந்து செல்ல
உறவுகளும் விலகிச் செல்ல
உறுதி மொழி தந்த ஊதாரிகளும் ஓடிச் செல்ல
இறுதியில் எமக்கு தனிமையே நிரந்தரமானது அம்மா!

உங்கள் ஆத்மா சாந்தி அடைய எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றோம்.

குறிப்பு: அன்னை சாருமதி அறக்கட்டளை ஊடாக எமது அம்மாவின் நினைவு தினத்தை முன்னிட்டு வவுனியா (ஓமந்தை) வேப்பங்குளத்தில் நாளை (08.09.2024) ஞாயிற்றுக்கிழமை 12.00 மணிக்கு மதிய உணவு வழங்கப்பட இருக்கின்றது.

அல்லைப்பிட்டி 02,
யாழ்ப்பாணம்.


நிர்வாகி:
அன்னை சாருமதி அறக்கட்டளை

(CS 56122) V-1

## மரண அறிவித்தல்

### செல்லப்பா தங்கராஜா

(இளைப்பாறிய எழுதுவினைஞர்)



தோற்றம் 08.06.1940 — மறைவு 03.09.2024

யாழ் காழ்வாய் மாவிட்டபுரத்தை பிறப்பிடமாகவும், கைதடி கிழக்கை வதிவிடமாகவும் கொண்ட செல்லப்பா தங்கராஜா அவர்கள் கடந்த (03.09.2024) செவ்வாய்க்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான செல்லப்பா - மீனாட்சிபிள்ளை தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான தம்பையா - நவமணி தம்பதியர் மற்றும் காலஞ்சென்றவர்களான நமசிவாயம் - அன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், ராஜேஸ்வரியின் அன்புக் கணவரும், தர்மினி (கொழும்பு), பிரதீபன் (UK), பிரபாகரன் (UK), பிரகாஷனி (அவுஸ்ரேலியா), ஆகியோரின் பாசமிகு தந்தையும் அருளீசன் (கொழும்பு), ராமஜெயம் (UK), நாகலோஜினி (UK), வசீகரன் (அவுஸ்ரேலியா), ஆகியோரின் அன்பு மாமனாரும் லரோசன், சாருகி, மகதி, அனுஷ், கனீஷ், விதுஷ், அஜானி, ஆகியோரின் பாசமிகு பேரனும் காலஞ்சென்ற தங்கரத்தினம் மற்றும் தங்கமணி (கனடா), காலஞ்சென்ற சிவராசா மற்றும் தங்கேஸ்வரி, சண்முகராஜா (அமெரிக்கா), ஆகியோரின் அன்புச் சகோதரரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரிகைகள் நாளை (08.09.2024) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று கைதடி கிழக்கு ஊற்றல் இந்து மயானத்தில் பூத உடல் தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

அமுதசுரபி
கைதடி கிழக்கு,
கைதடி.

தகவல்:
குடும்பத்தினர்
077 268 1949

(CS/56119) J-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்தி: 021 493 0000 - விளம்பரம்: 021-493 1111 — விளம்பரம்: advt@uthayan.com

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 07.09.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.